இலஞ்சம் தவிர் நெஞ்சம் நிமிர்

களம் -20 வெற்றி -06

# நேர்மை நெறி

ஜூன் 2022

(ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்)

(Reg.No.349/2001)

செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயர்பால தோரும் பழி

(NERMAI NERI)

Rs.10

## தரகர்களே நம் நாட்டு ஊழலின் ஊற்றுக்கண்



## ஊழல் நம் நாட்டின் சாபம்

PUBLISHED BY

ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை

பதிவு மற்றும் செயல் அலுவலகம்: 155, “நம்பகம்”,
கொன்னூர் நெடுஞ்சாலை, அன்பகம், சென்னை-600023
Cell:8778312823

e-mail:acmchennai2001@yahoo.com

website:anticorruptionchennai.com

# தலைவர் மடல்

**அன்பார்ந்த உறுப்பினர் சகோதர சகோதரிகளே** !

வணக்கம் !. மீண்டும் இம்மடல் மூலம் தொடர்பு கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். கொரோனா என்ற கொடிய வைரசின் கோரப்பிடியிலிருந்து தப்பித்து மெல்ல மீண்டு வந்து நீண்ட இடைவெளிக்குப்பின் இயக்கப் பொதுக்குழுக் கூட்டம் 10.07.2022 அன்று, சென்னை எக்மோர் பாண்டியன் ஓட்டலில் நடைபெற உள்ளது. அப்பொதுக்குழுவில் இயக்க நிர்வாகிகளுக்கான தேர்தலும் நடைபெற உள்ளது. அனைத்து உறுப்பினர்களும் பெருந்திரளாக வந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**ஊழல்மயமாக்கலின் ஒரு புதிய சித்தாந்தம்**:- அதிகார மையத்தில் இருந்த ஒருவருடன் சூழ்நிலை சந்தர்ப்பத்தினால், சந்தித்து உரையாடும் சந்தர்ப்பம் அமைந்தது. பேச்சின் போது, யாம், "தனியார் மயமென்ற போர்வையில் ஒரு கோடி ரூபாய் பொதுப்பணிகளை 10 கோடி ரூபாய்க்கு டெண்டர் விட்டு, 10% or 15% கமிசனாக, ஒன்று/ஒன்றரை கோடி ரூபாய் லஞ்சம் பெற ரூ.7.50 கோடி ரூபாயை வீணடிக்கிறீர்களே! இது என்ன தர்மம்? என்றும், இதற்குப் பதிலாக, வழக்கம் போல அரசுத்துறை மூலம் மதிப்பீடு தயாரித்து, டெண்டர் விட்டால், ஒரு கோடிக்கு டெண்டர் விட்டு, 15% சதம் லஞ்சம் வாங்கினாலும், மீதியுள்ள பணத்தில் வேறு பல தேவையான வேலைகளை செய்யலாமே!, ஆட்சியாளர்களின் 10% or 15% கமிசன் குறையப் போவதில்லையே! ஏன் இது போன்று மக்கள் பணத்தை வீணடிக்கிறீர்கள்? இதில் யாருக்கும் லாபம் இல்லையே ! என்று வினவினோம். எமது இந்தக் கேள்விக்கு பதில் கூற நீண்ட மவுனம் சாதித்த. பின், வற்புறுத்தியதின் பேரில், பெயரை வெளியிடக்கூடாது என்று சத்தியம் வாங்கிக்கொண்டு பதில் கூறினார். அவர் தம் பதிலில், ஆட்சியாளர்களின் நோக்கம், விரைவில் சம்பாதிக்க வேண்டும், அதற்கு பெரிய பெரிய திட்டங்களை தேர்வு செய்து தனியாரிடம் விட்டால், மொத்தமாக எடுத்த உடனேயே முழுக்கமிசனையும் பெற்றுவிடலாம்.

மேலும், அரசுத்துதுறை பொறியாளர்கள் மூலம் மதிப்பீடு தயாரித்தால் மதிப்பீடு குறைவாக இருப்பினும், தனியார் கன்சல்டன்டுக்கு மதிப்பீடு தயாரிக்கும் பணியை ஒப்படைத்தால் மட்டுமே அதற்கும் 15% கமிசன் கிடைக்கும் அல்லவா! அதனால்தான் அரசு துறைகளின் களஆய்வு செய்து மதிப்பீடு தயாரிக்கும் அலகுகளை மூடிவருகிறார்கள், ஏனெனில், அரசுத்துறைப் பனியாளர்களின் சம்பளத்திற்கு கமிசன் கேட்க முடியாதே. மதிப்பீடுகளை அரசுத்துறை மூலம் தயாரித்தால் கன்சல்டன்டிடம் பெறக்கூடிய கமிசன் கிடைக்காதே!. ஆட்சியாளர்களுக்கு, அதிகப்படியான கமிசனில் தான் குறியே தவிர, அத்றகாக அரசுப்பணம் விரையம் ஆகும் என்பதெல்லாம் அவர்களுக்கு ஒரு பொருட்டே அல்ல. 5 ஆண்டு ஆட்சிக்காலத்தில், எவ்வளவு கொள்ளையடிக்க முடியுமோ அவ்வளவு அடித்து விட வேண்டும் என்பது அவர்களின் கொள்கை. மக்களைப் பற்றிய நினைப்பே இருக்காதா? என்ற கேள்விக்கு, "எந்ததெந்த தொகுதியில், எந்த ஜாதியினர் அதிகம், அவர்களில் செல்வாக்கு மிக்க நபர் யார் என்பதைக் கண்டுபிடித்து அவரை கவனித்து விட்டால் அந்த் அமக்கள் ஓட்டு தமக்கு கிடைத்துவிடும்" என்பதும் "கையில் வேண்டிய அளவு பணம் இருப்பின், ஓட்டுக்கு ஒரு சில ஆயிரம் அதிகம் கொடுத்தால் போதும், வென்று விடலாம்" என்பதுவே அரசியல் தலைவர்களின் திட்டம்.

மற்றபடி மக்கள் நலன் என்பது கொள்ளை அடிக்க தீட்டும் திட்டத்தின் கொசுறுவாக கிடைப்பதே. ஆக எந்த திட்டமும் ஓட்டு நலனையும், கொள்ளையின் அளவையும் வைத்தே தீட்டப்படுகிறதேயன்றி, மக்களுக்கு நலன் பயக்கும் எண்ணத்துடன், சாராய ஒழிப்பு போன்ற கசப்பு மருந்து கொடுப்பதில்லை. அதனால், இலவசங்கள் பெருகுகின்றன. ஆக, உதாரணமாக ரூ.100 கோடிக்கு, மாணவர்களுக்கு, மடிக்கணினி இலவசமாக் வழங்க ஒருதிட்டம் தீட்டினால், ஒரு கம்புயூட்டர் விலையை கூட்டி டெண்டர் விட்டு, கொள்ளை

அடிக்கவும், பயணாளிகளின் ஓட்டுகளைக் குறிவைத்து மட்டுமே. கண்ணை மூடிக்கொண்டு, ஏழ்மை நிலையைக் கருத்தில் கொள்ளாமல், அனைத்து மாணவ/மாணவிகளுக்கும் இலவசம் அறிவிக்கப்படுகிறது. 100 கோடி ரூபாய் சொத்துள்ளவர் வீட்டு பிள்ளைகளுக்கும் இலவச அறிவிப்பு செய்வது ஓட்டுக்கும் கொள்ளையின் தொகையை கூட்டவுமே அன்றி, வேறு எதற்குமில்லை. .ஆக, இலவசத்தால் ஓட்டும், கமிசனால் வருமானமும் கிடைக்கும். Covid-19 தடுப்பூசி கொள்முதலில், எப்படி கொள்ளையடிக்க அதிமுக ஆட்சி முயற்சித்ததும், அதை டெல்லி உயர்நீதிமன்றம் தடுத்தது குறித்தும் யாம் இம்மடலில் முன்பே எழுதியிருக்கிறொம். ஆக, நாள் முழுவதும், ஆட்சியாளர்களின் எண்ணமும் செயலும், இன்று எப்படி கொள்ளையடிக்கலாம் என்பதே! என்பதை இந்த சந்திப்பு எமக்கு உணர்த்துகிறது. இதில் எந்தளவுக்கு உணமை என்பதை நீதிமன்றத்தில் நிருபிக்க இயலாது,

ஆகவே, இதுபோன்ற ஊழல்கள் நடைபெறுவதற்கு வாய்ப்பே இல்லாமல் இருக்கும் அளவுக்கு உரிய சட்டங்கள் இயற்றப்படவேண்டும். இந்த அவல நிலை, கட்சி பேதமின்றி இருப்பதாகத்தான் யாம் கருதுகிறோம். இது தான் வேடிக்க்கை. கட்சி பேதமின்றி நடைபெறும் இந்த புதிய சித்தாந்தம், இன்றைய அரசியிலின் கேவலமான நிலையை தோலுரித்துக் காட்டுக்கிறது. நமது செயலின் வேகத்தை அதிகப்படுத்த தூண்டுகிறது.

இதற்குக் காரனம், மக்கள் இயக்கங்கள் என்று, நம் போன்ற இயக்கங்கள், கூட்டம் போட்டு, "லஞ்சம் மோசம்!, லஞ்சம் ஒழிக்கப்படவேண்டும்! என்று மேடையில் பேசி மகிழ்கிறார்கள்". அவ்வளவே. அறப்போர் இயக்கம் மிகச் சிறப்பாக முன்னாள் அனைச்சர் திரு. வேலுமனியின் ஊழலைத்தோலுரித்து காட்டி பெரும் சட்டப்போராட்டம் நடத்தி வழக்கு பதிவு செய்யவைத்துள்ளது. நாமும், தற்போதைய அமைச்சர் திரு. செந்தில் பாலாஜி அவர்கள், அதிமுக போக்குவரத்துதுறை அமைச்சராக இருந்தபொழுது, நடந்த போக்குவரத்துக் கழகங்களில் அரங்கேற்றிய காசுக்கு வேலை ஊழல் மீது சட்டப்போராட்டம் நடததுகிறது. நமது, மாவட்டக்கிளை மற்றும் பிறகிளைகளும் இதுபோன்ற குறிப்பிட்ட ஊழல்களை எடுத்து சட்டப்படி குற்றவாளிகளை தண்டிக்க ஆதாரங்களை RTI சட்டத்தின் கீழ் பெற்று சட்டத்தின்படி நடவடிக்கையில் இறங்கவேண்டும். இதுதான், இயக்கக்கொள்கை. ஆனால், நமது கிளைகள் வெறும், நலச்சங்கங்களாகவே செயல்படுகிந்றன. இந்நிலை மாறி, களத்தில் இறங்கி ஊழல் எதிர்ப்பு இயக்கமாக செயல்பட உறுதிகொள்ள வேண்டும். இனி வரும் ஆண்டுகளில் , இதில் நாம் பெரும் முன்னேற்றத்தைக் காட்ட வேண்டும். வரும் நிர்வாகிகள் இதில் முனைப்புகாட்டுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

**ஒன்றுபடுவோம்! சட்டப்படி போராடுவோம்!! வெற்றிபெறுவோம்!!!.**

நன்றி! வணக்கம்!!.

அன்புடன்,
(ந.சுப்ரமனியன்)

---

**இயக்கத்துடன் தொடர்பு கொள்ள:**

| | |
|---|---|
| திரு **N** சுப்ரமணியன், தலைவர் | **: 9444274352** |
| திரு **V** கார்த்திகை ராஜன், பொதுச்செயலாளர் | **: 87783 12823** |
| திருமதி பாக்யலட்சுமி, மேலாளர் | **: 90031 25142** |

**E- Mail : acmchennai2001@yahoo.co.in**
**Website : anticorruptionchennai.com**

## இந்தியாவில் ஊழல்களின் ஊர்வலம்... !

வே.கார்த்திகை ராஜன்
பொது செயலாளர்

இந்தியாவில் ஊழல், லஞ்சம் தலைவிரித்து ஆடுகிறது. ஊழலும், லஞ்சமும் இந்திய சனநாயகத்திற்கு சவால் விடுகிறது. மேலும் இந்திய நாட்டின் பொருளாதார, தொழில், விவசாய வளர்ச்சிக்கும், சமூக நெறிகளுக்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் எதிராக லஞ்சமும், ஊழலும் விளங்குகிறது. உலகமயம், தனியார்மயம், தாராளமயம் முதலிய மக்கள் விரோத கொள்கைகள் அமல்படுத்தப்பட்ட நாடுகளொல்லாம் ஊழல் மயமாகியுள்ளது. மேலும், ஊழலை ஊக்கப்படுத்தி வளர்க்கிறது; அனைத்து துறைகளிலும் ஊழலை பெருக்குகிறது. பன்னாட்டு நிறுவனங்கள், இந்திய பெரு முதலாளித்துவ நிறுவனங்கள் முதலியவற்றிற்கு வரிச் சலுகை அளிப்பதிலும், நிலங்களை வழங்குவதிலும் பல்லாரயிரம் கோடி ரூபாய் அரசியல்வாதிகளுக்கும், அதிகாரிகளுக்கும் லஞ்சமாக வழங்கப்படுகிறது.

மக்களாட்சியின் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றிட முதலாளித்துவ கட்சிகள் கோடிக்கணக்கான பணத்தை வாரி இறைக்கின்றன. மக்களிடம் விழிப்புணர்வு இல்லாததும், தொலைநோக்கு பார்வை இல்லாததும் அரசியல்வாதிகளுக்கு நல்வாய்ப்பாக அமைந்துள்ளது. லஞ்சம் வாங்குகின்றவன், ஊழல் செய்கின்றவன் பிழைக்கத் தெரிந்தவன் என்று மக்களை நம்ப வைக்கின்றனர். லஞ்சம் வாங்கத் தெரியாதவன், ஊழல் செய்யாதவன் பிழைக்கத் தெரியாதவன் என்ற கருத்து சமூகத்தில் பரப்பப்படுகிறது. ஆனால், உண்மை என்னவென்றால் லஞ்சம் வாங்காமல், ஊழல் செய்யாமல் உள்ளவர்களால் தான் உலகம் பிழைத்துத் கொண்டிருக்கிறது என்ற உண்மை புறந்தள்ளப்படுகிறது. மீன் குஞ்சு எப்படி நீரைக் குடிக்கிறது என்பது அறிய இயலாது, அதுபோல் அரசியல்வாதிகள், அதிகாரிகள் லஞ்சம் வாங்குவதை, ஊழல் செய்வதை, கையாடல் செய்வதை கண்டுபிடிக்க முடியாது என அர்த்தசாஸ்திரம் என்னும் நூலில் கௌடில்யர் கூறியுள்ளார். இக்கருத்து இன்றைய அரசியல்வாதிகளுக்கு மிகவும் பொருந்தக்கூடியது.

மீன் விற்ற காசு நாறுவதில்லை, நாய் விற்ற காசு குரைப்பதில்லை என்பது தமிழகத்தின் பழமொழிகள், இந்தப் பழமொழிகளை அடிப்படையாகக் கொண்டு லஞ்சமும், ஊழலும் நியாயப்படுத்தப்படுகிறது. இந்தியாவில் 1957 ஆம் ஆண்டு ஜவகர்லால் நேரு பிரதமராக பதவி வகித்தபோது முந்திர ஊழலால் இந்திய பாராளுமன்றம் அமளி துமளியானது ஜவகர்லால் நேரு பாராளுமன்றத்தில் மன்னிப்பு கோரினார். தமிழகத்தில் இருந்து மத்தியில் நிதி அமைச்சராக பதவி வகித்த டி.டி. கிருஷ்ணமாச்சாரி பதவி விலகினார். இந்தியாவின் பிரதமராக இந்திரகாந்தி அம்மையார் பதவி வகித்த போது 1971 ஆம் ஆண்டு நகர்வாலா ஊழல், மாருதி கார் தொழிற்சாலை ஊழல் முதலிய ஊழல்களால் இந்திரகாந்தி பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்டார். இந்திய ஆட்சியாளர்கள் 1992 ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் அமல்படுத்திவரும் புதிய பொருளாதாரக் கொள்கைகளால் ஊழல் எந்த அளவிற்கு வளர்ந்துள்ளது. அந்த ஊழல்களில் காங்கிரஸ் கட்சியும், பாரதீய ஜனதா கட்சியும் ஈடுப்பட்டுள்ளது என்பதை கீழ்க்கண்ட பட்டியல் கூறும்.

1. 1987 போர்ஃபர்ஸ் ஊழல், பேர்பாக்ஸ் ஊழல் - ரூ. 260 கோடி
2. 1992 ஹர்சத் மேத்தா பங்குச்சந்தை ஊழல் - ரூ. 5000 கோடி
3. 1994 சர்க்கரை இறக்குமதி ஊழல் - ரூ. 650 கோடி
4. 1995 பிரபரன்சியல் அபார்ட்மென்ட் ஊழல் ரூ. 5000 கோடி
5. 1995 யூகோய்லேவ் டைனர் ஊழல் - ரூ. 400 கோடி
6. 1995 - காஸ்லாவ் விருந்து ஊழல் - ரூ. 400 கோடி

7. 1995 - மேகாலயா வன ஊழல் - ரூ. 300 கோடி
8. 1996 உர இறக்குமதி ஊழல் - ரூ. 1300 கோடி
9. 1996 யூரியா ஊழல் - ரூ. 133 கோடி
10. 1996 பீகார் மாட்டுத் தீவன ஊழல் - ரூ. 990 கோடி
11. 1997 சுக்ராம் டெலிகாம் ஊழல் - ரூ. 1500 கோடி
12. 1997 - எஸ்.என்.சி. லாவலைன் மின்சாரத் திட்ட ஊழல் - ரூ. 374 கோடி
13. 1997 பீகார் நில ஊழல் - ரூ. 400 கோடி
14. 1997 சி.ஆர். பான்சால் பங்கு மார்க்கெட் ஊழல் - ரூ. 1200 கோடி
15. 1998 தேக்கு மர வளர்ப்பு ஊழல் - ரூ. 8000 கோடி
16. 2001 யு.டி.ஐ. ஊழல் - ரூ. 4800 கோடி
17. 2001 தினேஸ் டால்மியா பங்கு மார்க்கெட் ஊழல் - ரூ.595 கோடி
18. 2001 கேதான் பரேக் செக்யூரிட்டி ஊழல் - ரூ. 1250 கோடி
19. 2001 வீரேத்திர ரஸ்ட்டதி உலக அளவில் ஊழல் - ரூ. 1 பில்லியன் வரை
20. 2002 சஞ்சய் அகர்வால் ஹோமிராடு ஊழல் - ரூ. 600 கோடி
21. 2003 டெல்க்கி பத்திரபபேர ஊழல் - ரூ. 172 கோடி
22. 2003 பிரமோத் மகாஜன் - டாடா விஎஸ்என்எல் ஊழல் - ரூ. 1200 கோடி
23. 2005 ஐ.பி.ஓ.டி. மாட் ஊழல் - ரூ. 146 கோடி
24. 2005 பீகார் வெள்ள நிவாரண ஊழல் - ரூ. 17 கோடி
25. 2005 - ஸ்கார்பென் சப்மைரின் ஊழல் - ரூ. 18, 979 கோடி
26. 2006 பஞ்சாப் சிட்டி சென்ட்டர் ஊழல் - ரூ. 1500 கோடி
27. 2006 தாஸ்காரிடார் ஊழல் ரூ. 175 கோடி
28. 2008 பூனே பில்லியனர் ஜெகன் அலிகான் வரி ஏய்ப்பு ஊழல் - ரூ. 50,000 கோடி
29. 2008 சத்யம் ஊழல் - ரூ. 10, 000 கோடி
30. 2008 ரிலையன்ஸ் பங்கு விற்பனை ஊழல் - ரூ. 513 கோடி
31. 2008 ராணுவ ரேசன் ஊழல் - ரூ. 5000 கோடி
32. 2008 - ஸ்டேட் பாங்க் ஆப் சௌராஸ்ட்ரா ஊழல் - ரூ. 95 கோடி
33. 2009 - ஜார்க்கண்ட் மருத்துவ சாதனங்கள் ஊழல் - ரூ. 130 கோடி
34. 2009 அரிசி ஏற்றுமதி ஊழல் - ரூ. 2500 கோடி
35. 2009 ஒரிசா சுரங்க ஊழல் - ரூ. 7000 கோடி
36. 2009 மதுகோடா சுரங்க ஊழல் - ரூ. 37000 கோடி
37. 2010 எல்.ஐ.சி. வீட்டுக் கடன் வழங்குவதில் ஊழல்
38. 2010 மும்பையில் ராணுவ வீரர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு ஆதர்ஷ் ஊழல்
39. 2010 புதுடெல்லியில் நடைபெற்ற காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் ஊழல்.
40. 2010 ஐ.பி.எல் கிரிக்கெட் ஊழல்
41. 2011 - 2 ஜி ஸ்பெக்ட்ராம் ஊழல் - ரூ. 1,76,000 கோடி.
42. 2012- வக்பு வாரிய நிலமோசடி ஊழல் - ரூ. 200000 கோடி
43. 2012 இந்திய நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டு முறைகேடு ஊழல் - ரூ. 185591 கோடி
44. 2012 உத்தரப்பிரதேசம் தேசிய ஊரக சுகாதாரத் திட்டம் - ரூ. 10000 கோடி
45. ஹவாலா நிதி முறைகேட்டில் 18 மில்லியன் டாலர் ஊழல்.
46. தங்க நாற்கரச் சாலை அமைக்கும் திட்டத்தில் நில மோசடியில் 100 மில்லியன் டாலர் ஊழல்.
47. கார்கில் போரில் உயிரிழந்த இராணுவ வீரர்களுக்கு சவப்பெட்டி வாங்கியதில் ஊழல் மகாராஷ்டிரா மாநிலத்தில் பாரதீய ஜனதா கட்சியின் முன்னாள் தேசியத் தலைவர் நிதின் கட்காரியும், தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவரும், மத்திய வேளாண் அமைச்சருமான சரத்பவாரும் சம்பந்தப்பட்ட பாசனக் கால்வாய் திட்ட மோசடியில் ரூ 75,000/- கோடி ஊழல்.

48. கர்நாடகத்தில் பாரதீய ஜனதா கட்சியின் முதல்வராக இருந்த எடியூரப்பா இரும்புத் தாது வெட்டி எடுப்பதில் ரூ 50 கோடி ஊழல்.
49. கோவாவில் பாரதீய ஜனதா கட்சி முதல்வர் பணிக்கர் அரசின் இரும்புத் தாது ஊழல் ரூ 25 கோடி ஊழல்
50. ஜார்க்கண்ட் மாநிலத்தில் அர்ஜூன் முண்டா மற்றும் மதுகோடாவின் கனிம ஊழல் ரூ 37 ஆயிரம் கோடி ஊழல்.
51. சத்தீஸ்கரில் கனிம வளங்களை வெட்டி எடுக்க ஒப்பந்தம் வழங்குவதில் மற்றும் மின் திட்டங்களில் ராமன்சிங் அரசு செய்த முறைகேடு ரூ 40 ஆயிரம் கோடி ஊழல்.
52. கர்நாடகத்தில் ரெட்டி சகோதரர்கள் கனிம வளங்கள் வெட்டி எடுப்பதற்கு ஆதரவாக செயல்பட்ட முன்னாள் மத்திய அமைச்சர் சுஸ்மாசுவராஜ் பெற்றது ரூ 1500 கோடி ஊழல்.

அனைத்திற்கும் மேலாக நரேந்திர மோடி முதல்வராக இருந்த குஜராத் மாநிலத்தில் கட்ச் மாவட்டத்தில் அலுமினா சுத்தகரிப்பு ஆலைக்கு நிலம் குத்தகைக்கு வழங்குவதில் செய்த நிதி மோசடி ஊழல்.

மேற்கண்ட ஊழல்கள் தவிர மத்திய, மாநில அரசுகள் பன்னாட்டு நிறுவனங்கள், இந்திய பெருமுதலாளித்துவ நிறுவனங்கள் முதலியவற்றுடன் தொழில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடும்போது இந்தியாவின் பிரதமர், மாநில முதலமைச்சர்கள், மத்திய அமைச்சர்கள், மாநில அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநிலங்களவை உறுப்பினர்கள் மற்றும் மத்திய, மாநில அரசுகளின் உயர்அதிகாரிகள் ஆகியோர் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து மதிப்பீட்டு தொகையில் 25 விழுக்காடு லஞ்சமாக பெறுகின்றனர். பிரதம மந்திரி கிராமப்புற சாலை மேம்பாட்டு திட்டம், நபார்டு சாலை மேம்பாட்டு திட்டம், தேசிய நெடுஞ்சாலைகள் மேம்பாட்டு திட்டம், மாநில நெடுஞ்சாலைகள் மேம்பாட்டு திட்டம் முதலியவைகளிலும் மேற்கண்ட நபர்கள் லஞ்சம் பெறுகின்றனர்.

இந்தியாவில் லஞ்சத்திலும், ஊழலிலும் புரளும் பணத்தைக் கொண்டு இந்திய மக்கள் அனைவருக்கும் இலவசமாக தரமான மருத்துவமனைகள் அமைக்க முடியும். இந்தியாவில் உள்ள நதிகள் அனைத்தையும் இணைத்து சுத்திகரிப்பு செய்து நீர்பாசனத்தை பெறுக்கி விவசாயத்தை மேம்படுத்த முடியும். விவசாயிகளின் விவசாயக் கடன்களையும், மாணவர்களின் கல்வி கடன்களையும் தள்ளுபடி செய்ய முடியும். இந்தியாவில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் கட்டாய இலவச கல்வி அளிக்க முடியும். இந்தியாவில் உள்ள வீடற்ற ஏழை மக்களுக்கு தரமான பாதுகாப்பான வீடு கட்டி வழங்கு முடியும். இந்தியாவில் உள்ள அனைத்த கிராம, நகர மக்களுக்கும் பாதுகாப்பான குடிநீர் வழங்க முடியும். அண்மையில் பி.பி.சி. நிறுவனம் நடத்திய ஆய்வில் உலகத்தில் லஞ்சம், ஊழல் நிறைந்த நாடுகளின் பட்டியலில் இந்தியா முதலிடத்தில் உள்ளது என அறிக்கை வெளியிட்டுள்ளது. இது இந்திய மக்களுக்கு , இந்திய நாட்டிற்கு பெரும் அவமானம். எனவே லஞ்சம், ஊழல் முதலியவற்றில் ஈடுபடும் அரசியல்வாதிகள், அதிகாரிகள், தரகர்கள் ஆகியோர்களுக்கு எதிராக போராடுவோம்.

இயக்கத்துக்கு நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

நன்கொடைகள். வருமான வரிச்சட்டம் பிரிவு **80 (G)** யின் கீழ் விலக்கு(சலுகை) உள்ளது. பணத்தை கீழ்க்கண்ட வங்கிக்கு **NEFT** மூலமாக அனுப்பலாம் .

**Indian OverSeas Bank, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009) Savings A/C No: 000901000041657**

# காமதேனுவை, அடிமாட்டு விலைக்கு விற்கும் பாஜக அரசு!

***-ச.அருணாசலம்***

May 4, 2022 (Aram Online)

லாபகரமான பொதுத் துறை நிறுவனங்களை - விற்கவே கூடாத தேசத்தின் மாணிக்க மகுடமான எல்.ஐ.சியை - நாட்டு மக்களின் பொதுச் சொத்தை - அடிமாட்டு விலைக்கு விற்கிறது பாஜக அரசு! காலத்தை வென்ற இந்திய பொதுத்துறை நிறுவனங்களில் தலையானது எல்.ஐ. சி எனப்படும் ஆயுள் காப்பீட்டு நிறுவனமாகும் .

இந்தியா விடுதலை அடைந்த பொழுது நாட்டின் மக்கள் தொகை 34.5 கோடியாகவும், தனி நபர் வருமானம் தலா 250/- ரூபாயாகவும் மிக ஏழ்மை நிலையில் இருந்தது. படிப்பறிவோ மக்கள் தொகையில் 12 சதவிகிதமே இருந்தது. அந்த சூழலிலும் சமூக பாதுகாப்பின் அவசியத்தை உணர்ந்த பிரதமர் நேரு, ‘காப்பீடு’ - **Insurance-** என்ற கலாச்சாரத்தின் முக்கியத்துவத்தை உயர்த்திப்பிடிக்க முன்வந்தார் ! இப்படித்தான் எல் ஐ சி என்ற ஆயுள் காப்பீட்டு நிறுவனம் 1956ம் ஆண்டு பிறந்தது.

தீப ஒளியை- வாழ்வு என்னும் விளக்கை- அணையாது காப்பாற்றும் இரு கைகளான எல் ஐ சி. அன்றிலிருந்து சாதாரண இந்திய மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்து இன்று மாபெரும் விருட்சமாக வளர்ந்துள்ளது. 1956 முதல் 2011 வரை ஒன்றிய அரசு இந் நிறுவனத்திற்கு முதலீடாகவும மற்ற வகையிலும் கொடுத்த தொகை வெறும் ஐந்து கோடி ரூபாய் மட்டுமே. ஆனால், ஆண்டு தோறும் எல் ஐ சி ஒன்றிய அரசிற்கு கொடுக்கும் டிவிடென்ட் தொகையோ பல்லாயிரம் கோடி!







இந்திய மக்களின் ஆதரவால், சேமிப்பால் (29 கோடி பாலிசிதாரர்கள் கொண்ட எல் ஐ சி) அவர்களது உழைப்பால் இன்று 39 லட்சம் கோடி மதிப்புள்ள மாபெரும் நிறுவனமாக வளர்ந்த கதை அனைவருக்குமே தெரியும்!

2014ல் ஆட்சிக்கு வந்தவர்கள் அன்று முதலே இந்தியா பிறந்து இப்பொழுது ‘நயா இந்தியா’ வாக நடை போடுவதாகவும் கதை விடுகின்றனர். அதன் ஒரு பகுதியாகவே பொதுத்துறை நிறுவனங்களையும், துறைமுகங்களையும், விமான நிலையங்களையும் கனிம வளங்களையும் சுரங்கம் மற்றும அதன் உரிமைகளையும், அதன் பெருமை அறியாமல் விற்று காசாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மானிட்டைசேஷன் (பொதுச்சொத்தை விற்று பணமாக்குதல்) என்ற கொள்கை தேசீய பணமாக்கல் திட்டமாக கடந்த ஆகஸ்ட் மாதம் இந்திய அரசால் அறிவிக்கப்பட்டது. அதன்

அங்கமாக எல் ஐ சி யை விற்று ஏப்பம் விடுவதன் முதல் படியாக குறிப்பிட்ட அளவு எல் ஐ சி பங்குகளை தனியாருக்கு (பணக்கார முதலாளிகளுக்கு) விற்பது என்று முடிவெடுத்தனர். எல் ஐ சி ஊழியர்கள் மற்றும் பாலிசிதார்ர்களின் பலத்த எதிர்ப்பை பொருட்படுத்தாமல், சேணம் போட்டுவிட்ட மட்ட குதிரை போல் ஒன்றிய அரசு முதலில் ஆரம்ப பொது விற்பனை (Initial Public Offer IPO) மூலம் 22.1375 கோடி பங்குகளை விற்று பணம் திரட்டிய்ள்ளது.

பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் பொது சேவைகளுக்கான மக்களின் ஆணையம் -**Public Commission on Public Sector and Public Services PCPSPS** என்ற ஒரு அமைப்பு, பல வல்லுநர்களை, பல முன்னாள் அதிகாரிகளை, நீதியரசர்கள, கல்வியாளர்களை, பேராசிரியர்களை, சமூக ஆர்வலர்களை மற்றும் சிந்தனையாளர்களை உறுப்பினர்களாக கொண்டது இந்த ஆணயம்! மே மாதம் 4 ந்தேதி நடந்த விற்பனை பித்தலாட்டமானது, கறைபடிந்தது, இதன்மூலம் இந்திய அரசுக்கு 54,000 கோடி ரூபாய்கள் இழப்பு ஏற்பட்டுள்ளது,






முன்னாள் ஒன்றிய அரசின் எரிசக்தி மற்றும் பொருளாதார விவகாரங்கள் துறையின் மூத்த செயலாளர் திரு. E.A.S . சர்மா, முன்னாள் கேரளா நிதி அமைச்சர் திரு. தாமஸ் ஐசக், முன்னாள் திட்டக்குழுமத்தின்(Planning Commission) உறுப்பினர் S.P. சுக்லா போன்றோர் இவ்வமைப்பின் உறுப்பினர்கள்.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கொடுக்கின்ற அழுத்தத்தினால் மோடி அரசின் நிதி அமைச்சகம் எல் ஐ சி ஷேர்களின் விலையை அதிக டிஸ்கவுண்ட் கொடுத்து விலை நிர்ணயித்து உள்ளது. இதனால் அரசுக்கு பல்லாயிரங்கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என எச்சரிக்கின்றனர் இக்குழுவினர் .இப்பொழுது தேசிய பங்கு வர்த்தக ஆணயமான Securities and Exchange Board of India (SEBI) விடம் எல் ஐ சி யின உள்ளார்ந்த மதிப்பு-Embedded Value- 5.40 லடசம் கோடி ரூபாய்கள் என்று நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. . இதன் பொருள் எல் ஐ சி ஷேரின் அடிப்படை மதிப்பு-Base Value- ரூ.853/- ஆகும்.

உள்ளார்ந்த மதிப்பு என்பது ( Embedded Value) ஒரு நிறுவனத்தின் உண்மை மதிப்பை நிர்ணயிக்க உதவும் ஒரு கூறுதானே ஒழிய, உண்மை மதிப்பல்ல. அந்த அடிப்படைக்கூறின் மேல் மற்ற கூறுகளையும் சேர்த்தால் உண்மை மதிப்பு தெரியவரும். அதனடிப்படையில்தான் பங்குகளின் விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. HDFC Life, SBI Life, ICICI போன்ற மற்ற காப்பீட்டு நிறுவனங்களின் பங்கு விலைகள் இப்படித்தான் - உள்ளார்ந்த மதிப்பு மற்றும் பல சந்தைக் கூறுகளை இணைத்து மதிப்புக் கூட்டல் மூலமாக- நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அதே நடைமுறையை எல் ஐ சி பங்கு மதிப்பீட்டிற்கும் பின்பற்ற வேண்டும் என்ற எதிர்பார்ப்பு நியாயமானது மட்டுமல்ல அவசியமானதுங்கூட.

அந்த வகையில் எல் ஐ சி யின் பங்கு விலை அடிப்படை மதிப்பான ரூ.853 2.5 மடங்கு முதல் 4 மடங்கு வரை கூட்டி மதிக்கப்படலாம் என அனைவரும் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் கடந்த ஏப்ரல் 26ந்தேதி செபியிடம் (SEBI) எல் ஐ சி சமர்ப்பித்துள்ள சிகப்பு வரைவு அறிக்கையில் ( Draft Red Herring Prospectus) எல் ஐ சி பங்கின் விலையை 904-949 ஆக நிர்ணயித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி ஒரு ஷேரின் விலை 1.11 மடங்கே மதிப்பு கூட்டப்பட்டுள்ளது என்று தெரியவந்துள்ளது. இது அநியாயமானது மட்டுமல்ல, பல்லாயிரக் கணக்கான பாலிசிதாரர்களை, சாதாரண இந்திய மக்களை மோசடி செய்யும் வேலை என இந்த அமைப்பு கூறுகிறது.

இதன்மூலம் 22.1375 கோடி பங்குகளை 904 ரூ என்ற குறைத்த மதிப்பீட்டில் பன்னாட்டு முதலாளிகளுக்கு விற்றால்-தாரை வார்க்கப்பட்டால்- அரசுக்கு கிடைக்கும் தொகை ரூ.21,008/- கோடிகள் தான்.. மதிப்பு கூட்டுதல் 2.5 மடங்காக இருந்தால் ஒரு பங்கின் விலை ரூ.2132/- ஆகும் . அரசுக்கு விற்பதால் வருமானம் 47,197/- கோடி கிடைக்கும். ICICI Prudential, SBI Life, HDFC Life ஆகிய மூன்று காப்பீட்டு நிறுவனங்களின் உள்ளார்ந்த மதிப்பை (E V). சந்தைப் படுத்தப்படும் பொழுது (Market Capitalisation) கடைப்பிடித்த விகிதம் 2.49 முதல் 3.96 வரை. இதில் HDFC க்கு அனுமதிக்கப்பட்ட அளவு 3.96 ஆகும் . சந்தை மதிப்பில் எல்ஐசி மலை என்றால், HDFC வெறும் மடுதான்.

HDFC Life காப்பீட்டு நிறுவன பங்குக்கு அளித்த மதிப்பு கூட்டல் (3.96 மடங்கு) முறையை எல் ஐ சிக்கு அனுசரித்தால் எல் ஐ சி பங்கின் விலை குறைந்தபட்சம் ரூ.3,379/- ஆக மாறியிருக்கும் . இதன் மூலம் வருமானமும் ரூ.74,803/- கோடியாக கூடியிருக்கும் . ஆனால் வெறும் 21,008/- கோடி ரூபாய்க்கு விற்க அரசு முயலுவதால் அரசுக்கு ஏற்படும இழப்பு 53,795/- கோடிகளாகும்.கோவிட் பெருந்தொற்றிலிருந்து உலகம் முற்றிலும் விடுபடுமுன்னர், உக்ரைன் ரஷ்யா போரினால் உலக பங்குச்சந்தையும் உள்நாட்டு பங்கு சந்தையும் தள்ளாடிக் கொண்டிருக்கும் பொழுது இந்த அடிமாட்டு விலை விற்பனை தேவையா? சந்தை நிலவரங்கள் சரியானபின் ஐபிஓ வெளியிட்டால் நஷ்டம் தவிர்க்கப் பட்டிருக்கும் அல்லவா?

பொதுத்துறை நிறுவனங்களை விற்று காசாக்குவதற்கு என்றேன்றே ஒரு அமைச்சகம் ஒன்றிய அரசிடம் உள்ளது. இத்த அமைச்சகத்தின் செயலாளர், “சந்தை நிலவரங்கள் சாதகமாக இல்லாத பொழுது பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்கமாட்டோம் என்ற கொள்கை உறுதிமொழியை நாடாளுமன்றத்திலும் அறிவித்தது. எல்ஜசி IPO பங்கு விற்பனையில் ஏன் இந்த கொள்கையிலிருந்து விலக்கு அளிக்கப் பட்டுள்ளது? இதற்கு யார் காரணம்? என்று காங்கிரஸ் கட்சி இன்று கேள்வி யெழுப்பி உள்ளது.

56 இன்ச் மார்பு, அரசியல் திண்ணம் என்றெல்லாம் வாய்ச் சவடால் பேசும் ஆட்சியாளர்கள், இன்று பன்னாட்டு முதலாளிகள் கொடுக்கும் அழுத்தத்திறகு பணிந்து எல் ஐ சி பங்குகளை அடிமாட்டு விலைக்கு விற்கத் துணியும் (பாஜக அரசின் ) தேசபக்தியை என்னவென்பது?

**நெஞ்சில் உரமுமின்றி,**
**நேர்மைத்திறனுமின்றி**
**வஞ்சனை செய்வாரடி - கிளியே**
**வாய்ச் சொல்லில் வீரரடி”**
**என்ற பாரதியின் பாடல்தான் நினைவுக்கு வருகிறது.**

கட்டுரையாளர்;**ச.அருணாசலம்**

# கிறங்கடிக்கும் கிரிப்டோ கரன்ஸி மோசடிகள்!

***-செழியன் ஜானகிராமன்***

May 31, 2022 **(Aram online)**

பாஜக அரசு கிரிப்டோ கரன்ஸியை அங்கீகரித்ததில் இருந்து நாடு முழுவதும் இந்த மோசடிகள் அரங்கேறுகின்றன! பல்லாயிரக்கணக்கானோர் பரிதாபமாக ஏமாறுகின்றனர்! கிரிப்டோ கரன்ஸியில் முதலீடு செய்து, அபாரமான வட்டியாம்! காந்தப் படுக்கை, ஈமு கோழி மோசடிகள் வரிசையில் தற்போது கிரிப்டோ கரன்சி!

நாம் சம்பாதிக்கும் பணத்தை வங்கியில், சேமிப்பு கணக்கில் வைத்தால் தற்பொழுது ஒரு லட்சம் ரூபாய்க்கு மாதம் 550 ரூபாய் வட்டியாக வருகிறது. இது மிகக் குறைந்த தொகையாகத் தெரியும். வங்கி நம்மிடம் இருந்து வாங்கிய பணத்தை 8 சதவிகிதத்திற்கு வீட்டுக் கடன், வாகன கடன், தொழில் கடன், நகைக் கடன் கடன் கொடுத்து அதில் வரும் வட்டியில் நமக்கு 550 கொடுக்கிறார்கள்! மிதி 250 ரூபாய் வங்கி ஊழியர்கள் சம்பளம், மற்ற அனைத்து செலவுகளையும் செய்கிறார்கள். இப்படித்தான் ஒரு நிதி நிறுவனம் இயங்கும். இப்படித்தான் இயங்க வேண்டும் என்று ரிசர்வ் வங்கி விதிமுறை இயற்றி உள்ளது. வங்கி போல் இயங்கும் பல நிதி நிறுவனங்களை இப்பொழுது பார்க்கப் போகிறோம். அதில் சில மோசடி நிதி நிறுவனங்கள் எப்படி இயங்குகிறது? எப்படி மக்களைச் சமாளித்து பணம் சுருட்டுகிறார்கள்? மாட்டாமல் எப்படித் தப்பிக்கிறார்கள்? ஆபத்து இங்குதான் ஒளிந்து கொண்டுள்ளது.

வங்கிக்கு என்று தனியாகப் பணம் கிடையாது. மக்களிடம் பலவித வழிகளில் பெறுகிறது. இதே வழிமுறையை தான் சில நிதி நிறுவனங்கள் பின்பற்றும். ஆனால் மக்களிடம் ஆசையைத் தூண்டும் வார்த்தைகள் பேசி பணத்தை வாங்கும். ஒரு லட்சத்திற்கு 550 ரூபாய் வட்டி வங்கி கொடுக்கிறது என்றால், இந்த மோசடி நிதி நிறுவனங்கள் மாதம் 5,000, 10,000, 20,000 வட்டி கொடுப்பதாகச் சொல்லும். ஒரு சில மாதங்களில் உங்கள் முதலீடு பல மடங்காகத் திரும்பிவரும் என்று உறுதி கொடுப்பார்கள். அதற்கு ஏற்ப ஏற்கனவே பணம் பெற்று வரும் சில வாடிக்கையாளர்களைப் பேச வைப்பார்கள். அவர்களின் வங்கிக் கணக்கை காண்பிப்பார்கள். எங்கள் நிறுவனம் முறையாக லைசென்ஸ் வாங்கி உள்ளதாகப் பல சான்றிதழ்களை நம் முன் விரித்துப் பார்க்கச் சொல்வார்கள்.

இதனால் எப்படிக் கொடுக்கிறார்கள் என்று நம்மை யோசித்து பார்க்க விடமாட்டார்கள். அதிகப்படியான வட்டி நம் மூளையை மழுங்கடித்துவிடும். அவர்களின் பணிவான நடத்தை சிறிதும் சந்தேகத்தை ஏற்படாமல் நம்மை மயக்கிவிடும்! இதில் பணத் தட்டுப்பாட்டில் இருக்கும் நடுத்தர மக்கள் தான் முதலில் விழுகிறார்கள். இந்த வகை மோசடித் திட்டங்களுக்கு பொன்சி(Ponzi) திட்டம் என்று பெயர். நமது ஒன்றிய பாஜக அரசு கிரிப்டோ கரன்சியை அங்கீகரிததினால் தான் இது போன்ற மோசடிகள் அரங்கேறுகின்றன!

**சார்லஸ் பொன்சி**

882 ஆம் ஆண்டு இத்தாலியில் பிறந்தவர் சார்லஸ் பொன்சி ! இவர், 1920 காலகட்டத்தில் தரப்படும் பணத்திற்கு 90 நாட்களுக்குள் நூறு சதவிகிதம் லாபம் தருவதாகக் கூறி பல நூறு கோடிகள் வசூலித்தார். ஆனால், சில வருடங்களில் திருப்பி கொடுக்க முடியாமல் நிறுவனம் சரிந்தது. அன்றிலிருந்து இது போன்ற திருப்பி கொடுக்கவே முடியாத திட்டங்களை பொன்சி திட்டம் என்று அழைக்கிறார்கள்! நாம் பார்க்கும் இந்த திட்டமும் பொன்சி வகைதான்.

தற்பொழுது நீங்கள் ஒரு லட்சம் கொடுத்தால் மாதம் 10,000 முதல் 30,000 வரை வட்டி கொடுப்பதாகச் சொல்லி களத்தில் இறங்கி உள்ளன பல மோசடி நிதி நிறுவனங்கள். வட்டி விகிதம் நிறுவனத்திற்கு நிறுவனம் மாறும். என்னிடம் சொன்ன சில நண்பர்கள் மாதம் ஒரு லட்சத்திற்கு 25,000 கொடுப்பதாக சொன்னார்கள். இன்னொருவர் மாதம் 8,000 ரூபாய் கொடுக்கிறார்கள் நானும் ஒரு லட்சம் போட்டு உள்ளேன் என்றார்.

**பொன்சி வகை திட்டங்கள் எப்படி இயங்குகிறது என்று பார்க்கலாம்**

வங்கி, மக்களுக்குக் கொடுக்கும் வட்டிக்கு அவை மற்றவர்களுக்குக் கடன் கொடுத்து அதிலிருந்து வரும் பணத்தில் வாடிக்கையாளர்களுக்கு வட்டி கொடுக்கிறது என்று பார்த்தோம். ஆனால், பொன்சி திட்டங்களை இயக்கும் நபர்கள் நம் பணத்தை க்ரிப்டோ கரன்சியில் முதலீடு செய்வதாகச் சொல்கிறார்கள். ஓர் லட்சம் முதலீடு செய்தால் 50,000 எங்களுக்கு லாபம் வரும் அதில் உங்களுக்கு 25,000 ரூபாய் தான் கொடுக்கிறோம் என்று சொல்வதை நாம் ஆராய்ந்து பார்க்க மாட்டோம். இதே வகை மோசடி நபர்கள் பத்து வருடங்கள் முன்பு forexல் அதாவது மற்ற நாடுகளின் கரன்சியில் முதலீடு செய்து லாபம் ஈட்டுவதாகச் சொன்னார்கள். நமக்குப் பரவலாகத் தெரிந்த ஈமு கோழி, காந்தப்படுகை போன்ற திட்டங்களை மறந்து இருக்க மாட்டோம்.

எது சொன்னால் நமக்கு புரியாதோ, குழப்பம் வருமோ.. அதைத்தான் சொல்வார்கள். கொஞ்சம் கூட அதைத் தெளிவுபடுத்திக் கொள்ள நாம் விரும்புவதில்லை. நமக்குத் தேவை அதிகப்படியான வட்டி மட்டும்தான். அதில்தான் கவனம் இருக்கும்.







அவர்கள் பணம் வாங்கிய உடன் நம் நம்பிக்கை இன்னும் அவர்கள் மீது அதிகமாகிவிடும். காரணம், நம் பணம் அவர்கள் கட்டுப்பாட்டில் உள்ளது. சரியாக அவர்கள் சொன்ன தேதியில் முதல் தவணை கொடுத்து விடுவார்கள். நாம் கொடுத்த ஒரு லட்சத்திலிருந்து தான் பத்தாயிரம் அல்லது சொன்ன தொகை கொடுக்கிறார்கள் என்று நாம் உணரமாட்டோம். லாபத்தில் கொடுப்பதாக நினைத்துக் கொள்வோம்.

உடனே நம் நண்பர்கள், உறவினர்களுக்குச் சொல்லத் தொடங்குவோம். கூடவே, நமக்கு வந்து உள்ள பத்தாயிரத்தைக் காண்பிப்போம். அதைப் பார்க்கும் பத்தில் நான்கு பேர் இந்த திட்டத்தில் இணைய விரும்புவார்கள். உங்கள் மீது இருக்கும் நம்பிக்கை தான் முக்கிய காரணம். அவர்களை பெருமையுடன் நீங்கள் அந்த நிறுவனத்தில் இணைத்து இருப்பீர்கள்!. இப்பொழுது அவர்களிடம் புதிதாக நான்கு நபர்களின் பணம் சேர்ந்து இருக்கும். அந்த நான்கு நபர்களுக்கும் சொன்ன தேதியில் மாத வட்டி கொடுத்துவிடுவார்கள். இப்படி நான்கு- ஐந்து மாதம் கொடுப்பார்கள். பிறகு மெல்லப் பேசத் தொடங்குவார்கள். ஒரு லட்சம் கொடுத்ததிற்கு மாதம் இவ்வளவு வட்டி வாங்குகிறீர்கள் அதே ஐந்து லட்சம் கொடுத்து இருந்தால் எவ்வளவு வரும் என்று ஆசை வார்த்தை கூறுவார்கள். அவர்கள்

சொல்லவில்லை என்றாலும், நாமே கொடுக்க தயாராக இருப்போம். கடன் வாங்கியாவது ஐந்து லட்சம் கொடுத்து விடுவோம்.

இப்படி புதிதாகச் சேரும் நபர்களிடம் மீண்டும், மீண்டும் பணம் வாங்குவார்கள். அவர்கள் பணத்தையே அடுத்த மாதம் கொடுப்பார்கள் அல்லது நம் பணத்தை அதற்கு முன்பு சேர்ந்தவர்களுக்கு கொடுப்பார்கள். நமக்கு அடுத்து புதியதாகச் சேர்பவர்கள் பணத்தைக் கொடுப்பார்கள்! இப்படி வலைப் பின்னல் போல் சென்று கொண்டு இருக்கும். அது ஒரு கட்டம் வரை தான் செல்லும் என்பது நம்மை விட அவர்களுக்கு நன்கு தெரியும். நம்முடைய மீதி பணத்தை வேறு எங்கேயோ முதலீடு அல்லது பதுக்கி வைத்து இருப்பார்கள். இவர்களால் அதிகபட்சம் 3 வருடம் வரை வாடிக்கையாளர்களைச் சமாளிக்க முடியும். அந்த அளவு திறமை உள்ளவர்கள். பிறகு எந்த நேரமும் நிறுவனத்தை மூடும் நிலை வரும் பொழுதான் பணம் கொடுத்த வாடிக்கையாளர்கள் முழித்துக் கொள்வார்கள். அதற்குள் கை மீறிச் சென்று இருக்கும்.

உலகில் எந்த முதலீடும் மாதம் 50, 100 மடங்கு லாபம் கொடுப்பதில்லை. அப்படி எந்த திட்டமும் இதுவரை இல்லை. முதலில் அனைவரும் சேமிப்பு-முதலீடு என்ன என்று கற்றுக் கற்றுக் கொள்ள வேண்டும். உலகம் முழுவதும் வங்கிகள் எவ்வளவு வட்டி கொடுக்கிறது என்று படிக்கத் தொடங்குங்கள். அடிப்படையான நிதி செயல்பாடுகளை அறிந்து கொள்வது மிக அவசியம்.

**மோசடி நிறுவனத்தை இந்த கேள்விகள் கேட்டுப் பாருங்கள்**

- ஏன் நாளிதழில் விளம்பரம் கொடுப்பதில்லை?
- சிறு வட்டி கொடுக்கும் வங்கி கூட நீண்ட விளம்பரம் கொடுக்கும் போது பெரிய வட்டி கொடுக்கும் நீங்கள் ஏன் அமைதியாக இருக்கிறீர்கள்?
- உங்கள் நிறுவனம் அமைந்துள்ள கட்டிடத்தில் ஏன் இவ்வளவு வட்டி கொடுக்கிறோம் என்று விளம்பரப் பலகை வைப்பதில்லை. சம்பந்தமே இல்லாத பெயரில் ஏன் நிறுவனம் இயங்குகிறது?
- தொலைக்காட்சியில் ஏன் திட்டங்களைக் குறித்துப் பேசுவதில்லை, துண்டு அறிக்கையை ஏன் நாளிதழில் இணைத்துக் கொடுப்பதில்லை?
- சிறு அறையில் சிலரை அழைத்து அவர்களிடம் மட்டும் திட்டத்தைச் சொல்லி பணத்தை ஏன் வாங்குகிறீர்கள்?

ஷேர் மார்க்கெட், பரஸ்பர நிதியில், அந்நிய நாட்டு கரன்சி, க்ரிப்டோ கரன்சி போன்ற திட்டங்களில் முதலீடு செய்து இவ்வளவு பணம் மாதம் மாதம் கொடுப்போம் என்று யாரும் உத்தரவாதம் கொடுக்கக் கூடாது என்பது செபி (SEBI) விதிமுறை. இவர்கள் ரிசர்வ் வாங்கிகளுக்கு கீழ் வரமாட்டார்கள்! ஆனால், இந்த மோசடிப் பேர்வழிகள் உங்கள் பணத்தை க்ரிப்டோ கரன்சியில் முதலீடு செய்து இவ்வளவு தருவோம் என்பதை விளம்பரம் அறிவித்தால் உடனே மாட்டிக் கொள்வார்கள்!

**பெரிய மோசடி நிறுவனங்கள்**

1998ஆம் ஆண்டு அனுபவ் பிளாண்டேஷன் (Anubhav Plantations) நிறுவனம் பல கோடி மோசடி செய்து லட்சக்கணக்கான மக்களைச் சாலையில் நிறுத்தியதை மறந்து இருக்க மாட்டோம். நாடு முழுவதும் மிகப் பரபரப்பாக பேசப்பட்ட விஷயம் இருந்தது. 2000 ஆம் ஆண்டு தொடங்கிய சாரதா குழுமம் குறுகிய காலத்தில் 2,500 கோடி ரூபாயை மக்களிடம் பெற்றது. ஆனால், அவர்கள் சொன்னது போல் திருப்பி கொடுக்க முடியாமல் 2013ஆம் ஆண்டு சரிந்தது. மேற்கு வங்கத்தில் நடந்த இந்த மோசடி நாடறிந்த ஒன்றாகும்!

மேலே குறிப்பிட்ட இரண்டு மோசடிகளும் நாடு முழுவதும் பேசப்பட்டவை ஆகும். ஆனால் சிறு சிறு மோசடி திட்டங்கள் பரவலாக அறியப்படாமல் ஆங்காங்கே நடந்து கொண்டு இருக்கின்றன! இங்கு தான் நாம் கவனமாக இருக்க வேண்டும்.

சமீபமாக தமிழக அரசால் முடக்கப்பட்ட ஆருத்ரா நகை நிறுவனம் ஒரு சிறந்த உதாரணம். பெரிய நிறுவனங்களை விட சில நபர்கள் இணைத்து இது போல் தமிழகத்தின் பல பகுதிகளில் மோசடி நிறுவனத்தை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள்! இவர்களிடம் இன்னும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். காரணம்! இவர்கள் நம் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து தேன் ஒழுக்க பேச்சு பேசுவார்கள்! ஏமாந்த பிறகே இவர்கள் மோசடி பேர்வழிகள் என்று உணர முடியும்!

ஒன்றை நினைவில் நிறுத்தி கொள்வோம். வங்கி கொடுக்கும் வட்டியை விட சில நிதி நிறுவனங்கள் ஒருசில சதவிகிதம் .உயர்த்தி கொடுக்கலாம். அதைத் தவிர பல மடங்கு வட்டி, சில மாதங்களில் உங்கள் அசல் இரட்டிப்பாகி விடும் என்பது உலகம் இருக்கும் வரை யாராலுமே கொடுக்க முடியாது. இது மாற்றமுடியாத உண்மை!

சமீபத்தில் தமிழக டிஜிபி கூட இந்த நிறுவனங்களிலிருந்து மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டு இருந்தார். இதில் என்ன வேடிக்கையென்றால், பல காவலர்களே பொன்சி வகை மோசடி திட்டங்களில் முதலீடு செய்து ஏமாந்து உள்ளனர். அவர்கள் யாரிடம் புகார் கொடுப்பார்கள்?

**கட்டுரையாளர்; செழியன் ஜானகிராமன்**

---

## <u>நேர்மையாளர்களின் வாழ்வில் சில சம்பவங்கள்</u>

## <u>பொறுமை கடலினும் பெரிது</u>

1932 ம் ஆண்டு மகாத்மா காந்தியையும், சர்தார் வல்லபாய் படேலையும் கைது செய்து சிறையில் அடைத்தது ஆங்கிலேய அரசு.

அவர்கள் சிறையில் தண்டனை அனுபவித்துக் கொண்டிருந்த போது, காந்திஜி வாழ்ந்து வந்த பர்தோலி ஆசிரமத்தை ஆங்கிலேய அரசு விற்றுவிடப் போவதாகப் பத்திரிக்கைகளில் செய்திகள் வெளியிடப்பட்டன.

இதை அறிந்த வல்லபாய் படேல் மிகவும் வேதனையுற்றார். அவர் காந்திஜியிடம், “தங்கள் ஆசிரமத்தை ஆங்கிலேய அரசு விற்பதா? இது மகா அக்கிரமம். என்னால் இதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை”, என்று மிகவும் வருத்தத்துடன் கூறினார்.

அத்ற்கு காந்திஜி, “இதற்குப் போய் ஏன் வருத்தப்படுகிறீர்கள்? ஆசிரமத்தை விற்றால் விற்று விட்டுப் போகட்டுமே. பாருங்கள்… அரசங்கத்துக்குச் சொந்தமான சிறையை நாம் எடுத்துக்கொண்டிருக்கும் போது, நமக்கு சொந்தமான ஆசிரமத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்கிறது. அவ்வளவு தான். இதில் எனக்கு துளியும் வருத்தமில்லை !” என்றாராம்.

அதைக்கேட்ட வல்லபாய் படேல், “தங்களைப்போன்ற பொறுமைசாலியை உலகில் வேறு எங்குமே காண முடியாது: பொறுமை கடலினும் பெரியது என்று தங்களின் வாழ்க்கையைப் பார்த்துத் தான் பொன்மொழி சொல்லி வைத்தார்கள் போலிருக்கிறது. முதுகிலே மரம் வளர்ந்திருக்கிறது என்றால், அதை வெட்டி அகற்றுங்கள் என்று சொல்லாமல். நல்லது தானே… நிழல் கொடுக்கும் என்று சொல்லும் உன்னத ரகத்தைச் சேர்ந்தவர் உலகிலேயே தாங்கள் ஒருவர் தான் என்பதைத் தவிர வேறு எதையும் என்னால் கூற முடியவில்லை !: என்றார்.

அதைக்கேட்ட காந்திஜி ஒரு புன்னகை மட்டும் சிந்தினார்.

# விழித்துக் கொண்டோரெல்லாம் பிழைத்துக் கொண்டார்,

*விழித்துக் கொண்டோரெல்லாம் பிழைத்துக் கொண்டார் குறட்டை விட்டோர் எல்லாம் கோட்டை விட்டார் என்ற* பட்டுக்கோட்டையாரின் வரிகளுக்கு ஏற்ப, இலங்கை நிலமை இந்தியாவுக்கு வராமல் தடுக்க, நமது இந்திய நாட்டில் தயாரிக்கப்படும் பொருட்களை மட்டுமே வாங்க வேண்டும். உண்மையைச் சொல்ல போனால், நமக்கு தேவையான அனைத்து பொருள்களையும் நம்ம பக்கத்தில் உள்ள நம்ம ஊர்க்காரர்கள் கடைகளில்தான் வாங்க வேண்டும். பத்து ரூபாய் விலை கூடுதலாக இருந்தாலும் பரவாயில்லை. நம்ம வீட்டு எல்லா நிகழ்ச்சியிலும் நம்ம சொந்தக்காரர்கள் தான் கலந்து கொள்வார்கள்.

*அமேசான்* கம்பெனிகாரனோ *பிளிப்கார்டு* கம்பேனிகாரனோ எந்த ஆன்லைன் சூப்பர் மார்க்கெட் கம்பெனிகாரனோ *உங்கள் வீட்டு நிகழ்ச்சிகளுக்கு வரமாட்டார்கள் என்பதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள்.* அரசு வேலை எல்லா மக்களுக்கும் கிடைக்காது. கொடுக்கவும் முடியாது. சுயமாக தொழில் செய்யும் சின்ன கடைகளிலும் தெருவில் கொண்டு வரும் சிறு வியாபாரிகளிடமும் பொருட்கள் வாங்க வேண்டும். அவர்கள் குடும்பங்கள் வாழ உதவி செய்ய வேண்டும்.

***இலங்கையின் வீழ்ச்சிக்கு காரணம் சீனாவின் கம்பெனிகளே?!***

சீனா பொருட்கள் மலிவான விலையில் கிடைத்ததால் இலங்கை மக்கள் சீனா தயாரிப்பு பொருட்களை மட்டுமே வாங்கி மகிழ்ந்தனர். அதனால் உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சி அடைந்தது வேலை இல்லா திண்டாட்டம் அதிகரித்தது. எந்த நாடாக இருந்தாலும் சொந்த நாட்டின் தொழில்களை ஊக்க படுத்த வேண்டும். பொது மக்கள் சொந்த நாட்டில் தயாரிக்கும் பொருட்களை மட்டுமே வாங்க வேண்டும். நமது நாட்டின் படிக்காத ஏழை மக்கள் காடுகளில் ஈத்த ஓலை புல்லுகளை சேகரித்து வௌக்குமாறு கட்டி தயார் செய்து தலையில் சுமந்து கொண்டு வீடு வீடாக சென்று விற்பனை செய்து அவர்கள் குடும்பங்கள் வாழ்ந்தார்கள்.

அதையும் சீனாவின் சுற்றுசூழலை மாசு படுத்தும் பிளாஸ்டிக் வௌக்கு மாறை விற்பனையில் இறக்கி அவர்கள் பிழைப்பிலும் மண்ணை அள்ளி போட்டு விட்டார்கள். முன் காலங்களில் தென்னை மட்டையில் கயிறு முறுக்கி கயிற்றால் தயாரிக்க படும் தரை விரிப்புகள் பயன்படுத்தினார்கள்.. அதை சீனாவின் சுற்றுசூழலை மாசு படுத்தும் ரப்பர் தரை விரிப்புகளை இறக்கி படிக்காத ஏழை மக்கள் தொழிலை இல்லாமல் செய்து விட்டார்கள். ஆற்றில் கோரம் புல்லுகளை சேகரித்து பாய் நெய்து லட்சக்கணக்கான நம் மக்கள் சுயமாக தொழில் செய்து சம்பாதித்து அவர்கள் குடும்பத்தினர் வாழ்ந்தார்கள். . அதையும் சீனாவின் சுற்றுசூழலை மாசு படுத்தும் பிளாஸ்டிக் பாய்களை இறக்கி அவர்கள் தொழில்களும் நஷ்டம் அடைந்துள்ளன.

வெளிநாட்டு கம்பெனிகளிடம் பல கோடிகள் நன்கொடை வாங்கி ஆன்லைன் கம்பெனிகளை ஊக்கப்படுத்துவதை விடுத்து சுயமாக தொழில் செய்யும் நம் ஊர்மக்களை தட்டி கொடுத்து ஊக்கபடுத்துங்கள். நம் கடைகளுக்கு ஆதரவு கொடுங்க. இல்லை என்றால் இலங்கையை விட இந்தியா மிக மோசமான நிலைக்கு தள்ளபடும் என்பதை புரிந்து கொள்ளுங்கள் உள்நாட்டு தயாரிப்பு பொருளை வாங்கி சுதேசி எண்ணங்களை மேம்படுத்துவோம், நன்றி

(படித்ததில் பிடித்தது)

**Shun Corruption!** **Feel Proud!!**

# ANTI CORRUPTION MOVEMENT CHENNAI

## REGD.NO.349/2001

ஊழல் எதிர்ப்பு இயக்க பொதுகுழு கூட்டம் நாள் **10-07-2022**

ஞாயிற்று கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை

**இடம்: ஒட்டல் பாண்டியன்,**

**15,கென்னத் லேன், எழும்பூர் ரயில் நிலையம் எதிரில்**

**நிகழ்ச்சி நிரல்**

**காலை 9.00 மணி முதல் 1030 மணி வரை அங்கத்தினர் பதிவு மற்றும் தேநீர்**

- **10.30 மணி தமிழ் தாய் வாழ்த்து**
- **1035 வரவேற்புரை**
- **1045 தலைவர் உரை**
- **11.00 இயக்க ஆண்டு அறிக்கை பொதுச் செயலர் சமர்ப்பித்தல்**
- **11.20 இயக்க வரவு செலவு தணிக்கை செய்யப்பட்ட அறிக்கை நிதி செயலர்**
- **12.00 இயக்க நிர்வாகிகள் தேர்தல் புதிய நிர்வாகிகள் தேர்தல் முடிவுகள் அறிவித்தல் தேர்தல்ஆணையர்**
- **13.00 மதிய உணவு இடைவேளை**
- **14.00 கூட்ட தீர்மானங்கள்**
- **14.15 ஊழல் ஒழிப்பு உறுதிமொழி**
- **14.25 நன்றி உரை**
- **15.00 நாட்டுப்பண்**

**மாவட்டம் மற்றும் கிளைச் செயலர்கள் இயக்க உறுப்பினர்கள் திரளாக வருகை தந்து கூட்டத்தை சிறப்பிக்க அன்போடு அழைக்கின்றோம். வாக்கு அளிக்கும் உறுப்பினர்கள் காலை 1100 மணி வரை மட்டுமே வருகைப்பதிவு ஏற்றுக்கொள்ளப்படும்.**

**பொதுச்செயலர்**

குறிப்பு:-

**அதிகாரப்பூர்வப பொதுக்குழு மற்றும் தேர்தல் அறிவிக்கை அனவருக்கும் தபாலில் அனுப்பப்பட்டிருப்பினும், நேர்மை நெறி/ இணைய தளத்திலும் பிரசுரிக்கப்படுகிறது.**

**நமது இயக்க இணையதளத்தில் 2022 ஜூலை 20ம் தேதியன்று உள்ள ஆண்டு/ஆயுள் உறுப்பினர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அனைவரும் சரிபார்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

**தேர்தல் விதிமுறைகள், வேட்பாளர் விண்ணப்பப்படிவம் (தமிழ்/ஆங்கிலம்) இயக்க இணையதளத்திலும், இந்த நேர்மை நெறி இதழிலும் கொடுக்கப்பட்டுள்ளது.**

---

**ஊழல் எதிர்ப்பு இயக்கம், சென்னை.பதிவு எண்349/2001**
**மாநில பொறுப்பாளர் தேர்தல் 2022-23 முதல் 2024-2025 வரை**
**தேர்தல் அறிவிக்கை நாள் 20-05-2022**

இயக்கத்தின் விதிமுறைகளின் படி மாநில நிர்வாகப் பொறுப்பாளர்களுக்கான தேர்தல் **10-07-2022**. ஞாயிற்றுக்கிழமை அன்று சென்னையில் நடைபெறவிருக்கும் பொதுக்குழு கூட்டத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது. கீழ்க்கண்ட பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட வேண்டியுள்ளது.

| **பொறுப்பாளர்கள்** | **எண்ணிக்கை** | **பொறுப்பாளர்கள்** | **எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1. தலைவர் | 1 | 7. செயலாளர்(கலைத்தொடர்ப்பு) | 1 |
| 2 .துணைத்தலைவர் | 1 | 8. செயலாளர்(செயல்திட்டம்) | 1 |
| 3 .பொதுச்செயலாளர் | 1 | 9. செயலாளர்(மக்கள்தொடர்பு) | 1 |
| 4 செயலாளர்(தலைமையகம்) | 1 | 10. செயலாளர்(பயிற்சி) | 1 |
| 5. செயலாளர்(நிதிநிர்வாகம்) | 1 | 11. செயலாள்ர்(சட்டநிர்வாகம்) | 1 |
| 6. செயலாளர்(வெளியீடு) | 1 | | |

- வேட்புமனு தலைமை அலுவலகத்தில் பெறவேண்டிய கடைசி தேதி : **13.06.2022**
- தகுதியுள்ள வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்படும் கடைசி தேதி : **20. 06.2022**
- வேட்பு மனு திரும்ப பெறுதல் கடைசி தேதி : **25. 06.2022**
- இறுதி வேட்பாளர் பட்டியல் தலைமை அலுவலகத்தில் வெளியிடபடும் தேதி : **28.06.2022**

வேட்பு மனுக்கள் தலைமை தேர்தல் அலுவலர் “ஊழல் எதிர்ப்பு இயக்கம்” என்ற முகவரியிட்ட உறையில் தலைமை செயல் அலுவலகத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

**அலுவலக முகவரி**:: **155,கொன்னூர் நெடுஞ்சலை,அயன்புரம்,சென்னை-600023**

**<u>தேர்தல் அதிகாரிகள்</u>**

1. **திரு.ப.முத்துசாமி , தலைவர் 9444010444**
2. **திரு.சதிஷ் குமார், தேர்தல்குழு உறுப்பினர் 9941290799**
3. **திரு.பாலாஜி, தேர்தல்குழு உறுப்பினர் 9283592835**

குறிப்பு:-

1. வேட்பாளர், வாக்களர் தகுதி விதிமுறைகள் “நேர்மை நெறி” இதழில் வெளியிடப்பட்டுள்ளன.
2. வேட்புமனு மாதிரி படிவம் இந்த மாத இதழில் வெளியிடப்பட்டுள்ளது.
3. வாக்காளர் பட்டியல் 25 .05.2022 அன்று தலைமையகத்தில் வெளியிடப்படும்.
4. தேர்தல் வேலைக்கான கூடுதல் உதவி தேவைப்பட்டால், தேர்தல் தலைமை அலுவலகர், நமது இயக்கத்தின் மற்ற உறுப்பினனர்களின் உதவியை பெற்றுக்கொள்வார்

**தேர்தல் குழுத் தலைவர்**

## ELECTION RULES [See Article 21]

1. Short title: - These rules may be called the Election Rules for the Election Rules for the election of office bearers of the Association.
2. Eligibility of a candidate: - A candidate seeking election to any office of the Committee shall be a member of the Association on the date of calling for nomination and should have paid the current annual subscription.
3. Filing of Nomination:-
   i. The nomination of a candidateshall be prior to the date and time stipulated in the election schedule in the prescribed format annexed to these rules.
   ii. A nomination filed by a candidate, on scrutiny, if found to be violative of these election rules or Bye-laws or articles of the Association, will be declared invalid.
   iii. A candidate shall be proposed by a member and seconded by the member.
   iv. The nomination shall be filed in the following format given in the following page:-

**4. Eligibility of Voter**:-

a) A Voter shall be a current member of the Association.
b) He should be registered in the Annual General Meeting in which election is to be conducted.
c) He cannot vote by proxy.
d) A member enrolled after the of election after the date of election notification shall not be eligible to vote in the election.

**5. Election Schedule: - Notification** for election will be published in the periodical of the Association .A Period of 20 days will be given to file nomination from the date of notification. The Valid contestants will be displayed in Association office within 5 days from the last date of filling of nomination. Withdrawals of nominations can be made within the next days after the date of publication of valid contestants. The final list of contestants will be displayed in the Association Office the day to the last date of withdrawals.

**6. Election Procedure**: - An Election Committee consi9sting of the Chairman and three members known as Scrutineers shall be constituted by the Committee prior to the due date of election notification. The Election Committee members shall be selected only from the members .Election notification shall be issued by the Election Committee along with terms and conditions found necessary for smooth conduct of the election. After issue of notification all the nominations received shall be scrutinized only by the Election Committee. The Election Committee shall maintain the same as a secret document. The decision of the Election Committee in acceptance or rejection of a

nomination of a candidate shall be final. The Election Committee shall publish the voters list in the Association Office notice Board within 7 days of the election notification.

No member of the Election Committee shall be a candidate for the election. After the declaration of the final contestants by the Election Committee in making election arrangement.

**7. Polling**: - The polling will be conducted during Annual General Meeting at appropriate time as decided by the Chairman of the meeting, by secret ballots.

(a) Only members who have registered within the registration time prescribed in the notice for the meeting will be given ballot and allowed to vote.

(b) The candidate may, if he wishes, have an agent, while poling is in progress the candidate himself will not be allowed to perform the functions of an agent. But he can visit briefly if permitted by the chairman.

(c) Casting a vote is done by the voter by making a cross mark (x) against the name of the candidate of his or her choice in the relevant column. Any other sign or seal authorized by the chairman is acceptable. However, it shall be uniform and different marks are not permitted.

**8. Invalidation of Vote:-**

a. If the cross mark or any other authorized mark is found against more names than the required number of posts in the same category, the vote will be declared to be invalid in so far as those relate to the particular post. For other posts, where voting has been properly done in the same ballot, shall however, be counted.
b. Putting more than one mark against the same name or voting for fewer number of posts than required or leaving blanks, without marking the cross against the candidates of certain posts, will not invalidate a ballot, provided other conditions are satisfied.

**9. Counting: -**

i. Immediately after the poll, on the same day, the votes shall be counted without any interruption and the votes tally shall be prepared, and signed by the Election Committee.
ii. One agent will be allowed for each candidate, if the latter specifically request so. The counting will be done under the supervision of Chairman and Scrutineers. The Election Committee may draw the required members from the meeting to assist the polling and counting of votes.

iii. Immediately on completion of counting, the results shall be declared by the Chairman of the Election Committee and such declaration shall be final and no discussion thereupon shall be permitted.

iv. The Election Committee will give a certificate will give a certificate to every elected person to that effect.

v. All arrangements and expenditure for the election shall be provided by the General Secretary-Finance as desired by the Election Committee.

**10. Miscellaneous:-**

i. A contestant can send an appeal to the members highlighting the policies and programmes he would follow if elected.

ii. Any aspect not explicitly covered in these Rules shall be issued as and when found necessary by the Election Committee and shall be scrupulously followed.

iii. Immediately on completion of counting, the results shall be declared by the Chairman of the Election Committee and such declaration shall be final and no discussion thereupon shall be permitted.

iv. The Election Committee will give a certificate to every elected person to that effect.

v. All arrangements and expenditure for the election shall be provided by the General Secretary/Secretary-Finance as desired by the Election Committee.

**10. Miscellaneous:-**

i. A Contestant can send an appeal to the members highlighting the policies and programmes he would follow if elected.

ii. Any aspect not explicitly covered in these Rules shall be Issued as and when found necessary by the Election Committee and shall be scrupulously followed.

iii. The Chairman of the Election Committee may order re-counting of ballots on a written request from a contestant/group of contestants after getting the opinion of the three Scrutineers. The request for recounting shall be made before the declaration of results.

iv. No member or group of members shall approach any court and seek legal remedy on his rights in relation to the elections.

v. A member/group of members if they feel that an election has not been conducted in accordance with bye-laws of the Association can invoke their right to call for Special General Meeting by getting signatures of not less than 25% of the total members, on the rolls of the Association, to seek fresh election.

## ANTI CORRUPTION MOVEMENT CHENNAI

## Nomination Form

**Election of office bearers for the year……..**

1. Name of the Post Contested :
2. Name Address and Membership
   No. of the candidate :
3. (i) Name ,Address and Member ship
   No. of the proposer :
   (iii) Signature of the Proposer :
4. (i)Name ,Address and Membership
   No. of the seconder :
   (ii)Signature of the Seconde :

**Consent of the Candidate**

I agree to contest for the post mentioned above. I shall abide by the rules and regulation of the election.

Station: Signature of the Candidate

Date :

**For Office Use Only**

5. Remarks of the Scrutineers: The nomination is received.

The nomination is Valid/

The nomination is withdrawn/

The nomination is invalid due to …….

Signature of Scrutineers

(1)

(2)

(3)

Signature of the Chairman

## செயற்குழுக் கூட்டம் (28-05-2022)

இன்று (28-05-2022) நமது இயக்கத் தலைவர் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் பொது செயலாளரும், மூன்று செயலாளர்களும் ஒரு பார்வையாளரும் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன.

1. இயக்கத்தின் 2022 ஏப்ரல் மாத வரவு-செலவு அறிக்கை வாசிக்கப்பட்டது. வரவு-செலவு கணக்கு சரியானதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
2. ஜூலை 10ம் தேதி நடைபெற உள்ள பொதுக்கூட்டத்தின் முன்னேற்பாடுகள் பற்றி விவாதித்து, நடைமுறைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.
3. அமைச்சர் செந்தில் பாலாஜி வழக்கின் தற்போதைய நிலவரம் பற்றி தலைவர் விளக்கிக் கூறினார்.
4. பொதுச் செயலாளர் நன்றியுடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

ந. சுப்ரமணியன்
தலைவர்

வே. கார்த்திகை ராஜன்
பொதுச்செயலாளர்




**நேர்மை நெறியில் குறைந்த செலவில் விளம்பரம் செய்து பயன் பெருவீர்!**

**விளம்பரக்கட்டண விவரம்**

**முழுப்பக்கம் ரூ 2000/-; அரைப்பக்கம் ரூ 1000/-; கால் பக்கம் ரூ 500/-.**

**இதழில் வருகின்ற கட்டுரைகள், விளம்பரங்கள் படைப்பாளியையே சார்ந்தது**

**நேர்மை நெறி நிர்வாகிகளோ , ஆசிரியரோ பொறுப்பல்ல**

# லஞ்சம், ஊழல் குறித்து அச்சமின்றி புகார் அளிக்கலாம்

## பாதுகாப்பு உறுதி செய்யப்படும்

திருச்சி, ஏப்.27: லஞ்சம் மற்றும் ஊழல்கள் குறித்து மக்கள் எவ்வித அச்சமின்றி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்கலாம். தகவல் தெரிவிக்கப்படும் நபர்களின் ரகசியம் காக்கப்படும். மேலும், அரசு அலுவலகங்களில் சான்றுகள், ஆவணங்கள் வாங்குவதற்கு முறையான ஆவணங்கள் இருந்தும், லஞ்சம் பெறுவதற்காக பொதுமக்கள் அலைக்கழிக்கப்பட்டால் உடனே லஞ்சஒழிப்புதுறை தொடர்புகொண்டுபுகார் அளிக்கலாம். ஆவணங்கள் அனைத்தும் சரியாக இருந்தும், லஞ்சம் வாங்குவதற்காக பல மாதங்கள் அலைக்கழிக்கப்பட்டாலும் புகார் செய்யலாம்.

குறிப்பாக, மத்திய மண்டலத்தில் உள்ள கிராமப்புற அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்பு துறையின் போர்டு வைக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள எண்ணை தொடர்பு கொண்டு பொதுமக்கள் புகார் அளிக்கலாம்.

திருச்சி மாவட்டத்தை சேர்ந்த பொதுமக்கள், நம்பர்.23. ரேஸ்கோர்ஸ் சாலை, அண்ணா ஸ்டேடியம், திருச்சி-23. என்ற முகவரியில் உள்ள ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் புகார் தரலாம். மேலும், லஞ்ச ஒழிப்பு டிஎஸ்பி மணிகண்டன்: 94981-57799 மற்றும் 0431-2420166 என்ற எண்ணில் எந்நேரமும் புகார் அளிக்கலாம். டிஎஸ்பி மணிகண்டனின் செல்போன் எண்ணிற்கு வாட்ஸ்அப் மூலம் புகார் தெரிவிக்கலாம். முக்கியமாக, திருச்சி மாவட்டத்தில் பணப்புழக்கம் உள்ள அரசு அலுவலகங்கள் கண்காணிப்புவளையத்திற்குள் உள்ளன.

### அச்சம் தேவையில்லை

லஞ்சம் குறித்த புகார் அளிக்க மக்கள் அச்சம் கொள்ள தேவையில்லை. உங்களின் ரகசியம் மற்றும் பாதுகாப்பு உறுதி செய்யப்படும். லஞ்ச விசாரணை நடக்கும் நேரத்தில், புகார் அளித்த உங்களிடம் முறையான ஆவணங்கள் இருக்கும் பட்சத்தில், அதற்கான சான்றிதழ், ஆவணங்களை லஞ்ச ஒழிப்பு துறையினரே பெற்றுத்தர ஏற்பாடு செய்வார்கள். திருச்சி லஞ்ச ஒழிப்பு டிஎஸ்பி மணிகண்டனை எந்நேரமும் தொடர்பு கொண்டு புகார் அளிக்கலாம். லஞ்சம், ஊழல் குறித்த புகார்களை தெரிவிப்பதில் தயக்கமும், அச்சமும் கொள்ளத் தேவையில்லை.

“ திருச்சியில் கடந்த 3 மாதத்தில் மட்டும் வருவாய்த்துறையில் 2 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 4 பேர் கைது செய்யப்பட்டனர். மின்வாரிய துறையில் வழக்கு பதிவு செய்யப்பட்டு 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்,”.

சென்னை அருகே புதுவண்ணை க.பாபு

# நில அபகரிப்பு முயற்சி வழக்கில் சார்பதிவாளர் கைது

சென்னை, மே 25- சென்னை அருகே போலி ஆவணங்கள் மூலம் ₹65 கோடி மதிப்பிலான நிலம் அபகரிப்பு முயற்சி வழக்கில் நேற்று சார்பதிவாளரை போலீசார் கைது செய்தனர்.

சென்னை அருகே கிழக்கு கடற்கரை சாலையில், முட்டுக்காடு கிராமத்தில் பிரபலமான கிரானைட் நிறுவனத்துக்கு சொந்தமான 5 ஏக்கர் 88 சென்ட் நிலம் உள்ளது. இந்த சொத்தை சம்பந்தப்பட்ட நிறுவனம் 1971ம் ஆண்டு தென்சென்னை மாவட்ட சார்பதிவகத்தில் வைத்து கிரையம் பெற்றுள்ளது. அந்நிறுவனமும் தங்களுக்கு சொந்தமான மற்ற நிலங்களோடு சேர்த்து, இந்த நிலத்துக்கும் மதில்சுவர் அமைத்து, வருவாய்த்துறை சார்பில் அந்த நிறுவனம் மற்றும் இயக்குனர்களின் பெயரில் பட்டாவும் பெற்றுள்ளனர்.

இந்நிலையில், இந்த நிலத்தை போலி ஆவணங்கள் மூலம் அபகரிக்க நினைத்த கும்பல், 1971ம் ஆண்டு மதுராந்தகத்தை சேர்ந்த மதுரை என்பவர் கிரையம் பெற்றது போல் போலி ஆவணம் தயார் செய்து, மதுராந்தகத்தில் ஆட்டோவில் செல்லும்போது ஆவணம் தொலைந்து விட்டதாக கூறி, அங்குள்ள காவல் நிலையத்தில் புகார் அளித்து சான்று பெற்றுள்ளனர். அதை வைத்து, திருப்போரூர் சார்பதிவகத்தில் தற்காலிக ஊழியராக பணியாற்றும் காசி (60) என்பவர் மூலமாக போலி ஆவணங்களை தயார் செய்து சார்பதிவாளர் அலுவலகம் கொடுத்தது போன்று நகல் ஆவணம் பெற்றுள்ளனர்.

இந்த ஆவணத்தை வைத்து, 2020ம் ஆண்டு டிசம்பர் மாதம் மதுராந்தகத்தை சேர்ந்த மதுரை என்பவர், தனது மகன் ரஞ்சித்குமாருக்கு குடும்ப தான செட்டில்மெண்ட் கொடுப்பது போல் ஆவணம் தயார் செய்து, திருப்போரூர் பத்திரப்பதிவு அலுவலகத்தில் பதிவுக்கு கொடுத்துள்ளனர். இந்த ஆவணத்தை அப்போதைய சார்பதிவாளர் செல்வசுந்தரி என்பவர் பதிவு செய்துள்ளார். இதற்கிடையே போலி ஆவணம் தயார் செய்த கும்பல், மதில்சுவர் போடப்பட்ட நிலத்தின் உள்ளே நுழைந்து அபகரிக்க முயற்சித்தனர்.



செல்வசுந்தரி

அப்போது தான் உண்மை உரிமையாளர்களான பிரபல கிரானைட் கம்பெனி அதிபர்கள், தங்களது நிலம் மோசடியாக பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ளதை உணர்ந்துள்ளனர். இதையடுத்து தனியார் நிறுவனத்தின் சார்பில் சென்னை தாம்பரம் பெருநகர காவல் ஆணையர் ரவியிடம் புகார் செய்யப்பட்டது. இதைத்தொடர்ந்து, இந்த போலி ஆவணம் குறித்து தனிப்படை அமைத்து தீவிரமாக விசாரித்தனர்.

கடந்த ஒரு வாரமாக திருப்போரூர் சார்பதிவகத்தில் தனிப்படை விசாரணையில், அலுவலக தற்காலிக ஊழியர் காசி என்பவர் உதவியோடு சார்பதிவாளர் செல்வசுந்தரி இந்த முறைகேட்டுக்கு துணைபோனது தெரியவந்தது. இந்நிலையில், கடந்த 13ம் தேதி தாம்பரம் மாநகர தனிப்படை போலீசார் தற்காலிக ஊழியர் காசி, அவரது மருமகன் பிரபாகரன், போலி ஆவணம் எழுதிக் கொண்ட ரஞ்சித்குமார் ஆகியோரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில், போலி ஆவணத்தை பதிவு செய்த சார்பதிவாளர் செல்வசுந்தரி, ஏற்கெனவே லஞ்ச வழக்கு ஒன்றில் கைதாகி இடைநீக்கம் செய்யப்பட்டிருந்தார். சென்னை புறநகரில் உறவினர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்த செல்வசுந்தரியை நேற்று மாலை தனிப்படை போலீசார் கைது செய்தனர். பின்னர் அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.



கிண்டி சிறுவர் பூங்கா நுழைவு வாயில், அதில் உள்ள பறவைகள் மற்றும் மிருகங்களின் பொம்மைக்கு வர்ணம் தீட்டும் பணி விறுவிறுப்பாக நடந்து வருகிறது.

# கருணை வேலை வாங்கிய விஏஓ ‘கருணை’ காட்ட மறுத்ததால் கைது

## இனிப்பு வழங்கி மக்கள் மகிழ்ச்சி

திருச்சி, ஏப். 29-

திருச்சியில் கணவன் இறந்து 20 நாட்கள் ஆன நிலையில் இறப்பு சான்றிதழ் வாங்கச் சென்ற பெண்ணிடம் ரூ.ஆயிரம் லஞ்சம் வாங்கிய விஏஓவை போலீசார் கைது செய்தனர். லஞ்ச அதிகாரி கைதானதையடுத்து ஊர் மக்கள் இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.

திருச்சி மாவட்டம் மண்ணச்சநல்லூார் அருகே எதுமலையைச் சேர்ந்தவர் ராமர், விவசாயி. இவர் சில நாட்களுக்கு முன்பு உடல்நலம் பாதிக்கப்பட்டு இறந்தார். இதற்கான சான்றிதழ் வாங்க ராமரின் மனைவி அமிர்தம் (62). எதுமலை விஏஓ சுரேசிடம் மனுத்தாக்கல் செய்து விட்டு காத்திருந்தார். பல நாட்களாக அலைந்தும் சுரேஷ் சான்றிதழ் வழங்கவில்லை. இதுகுறித்து அமிர்தம் கேட்டபோது பணம் கொடுத்தால் மட்டுமே வேலை நடக்கும் என்று விஏஓ கூறினார். இதன்படி ரூ.2 ஆயிரம் பேசி முதலில் ஆயிரம், சான்றிதழ் கிடைத்த பிறகு ஆயிரம் கொடுக்க வேண்டுமென பேசி முடிக்கப்பட்டது. ஆனால், லஞ்சம் கொடுக்க விரும்பாத அமிர்தம் திருச்சி லஞ்சஒழிப்பு டிஎஸ்பி மணிகண்டனிடம் புகார் கொடுத்தார். போலீசாரின் அறிவுரைப்படி நேற்று காலை விஏஓ அலுவலகத்துக்கு சென்ற அமிர்தம் ரூ.ஆயிரத்தை, விஏஓ சுரேசிடம் வழங்கினார்.



சுரேஷ்.

அப்போது அங்கு மறைந்து நின்ற லஞ்ச ஒழிப்பு போலீசார் சுரேசை கையும் களவுமாக கைது செய்தனர். விசாரணையில் கணவன் இறந்து 20 நாள் கூட ஆகாத நிலையில் அமிர்தத்தை அலைய விட்டு மனஉளைச்சலை ஏற்படுத்தியது தெரியவந்தது.

சுரேசின் தந்தை தலையாரியாக பணியில் இருந்த போது இறந்து விட்டார். கருணை அடிப்படையில் சுரேசுக்கு கடந்த 2010ம் ஆண்டு அரசு வேலை கொடுக்கப்பட்டது. சுரேஷ் கைது செய்யப்பட்ட தகவலறிந்த அப்பகுதி மக்கள் அலுவலகம் அருகே திரண்டு ஒருவருக்கு ஒருவர் இனிப்பு வ்ழங்கி கொண்டாடினர்.

தினமணி 4/12

# போலி ஆவணங்கள் மூலம் ரூ. 97 லட்சம் மோசடி

## பெண் மேலாளர் பணியிடை நீக்கம்

**வேலூர், ஜூன் 1:** போலி ஆவணங்கள் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கியதாக ரூ. 97 லட்சம் மோசடியில் ஈடுபட்டு கைதான கூட்டுறவு வங்கி பெண் மேலாளர் செவ்வாய்க்கிழமை பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.



கைது செய்யப்பட்ட உமாமகேஸ்வரி.

வேலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி குடியாத்தம் கிளையில் 2018-2019-ஆம் ஆண்டில் கிளை மேலாளராகப் பணிபுரிந்து வந்தவர் உமாமகேஸ்வரி (38). அந்த கால கட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கியதில் முறைகேடு நடந்ததாக புகார் எழுந்தது. அதன்பேரில், கூட்டுறவு சங்க தணிக்கைத் துறை அதிகாரிகள் தணிக்கை மேற்கொண்டனர். அதில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு போலி ஆவணங்கள் மூலம் போலியான பயனாளிகளுக்கு ரூ. 97 லட்சத்துக்கு கடன் வழங்கி மோசடியில் ஈடுபட்டது தெரியவந்தது. மோசடியில் ஈடுபட்ட அப்போதைய வங்கியின் கிளை மேலாளர் உமாமகேஸ்வரி மீது கூட்டுறவு துணைப் பதிவாளர் அருட்பெருஞ்ஜோதி அளித்த புகாரின் பேரில், வணிக குற்றப்பிரிவு போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி, உமாமகேஸ்வரியை செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

வேலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநரின் உத்தரவின்பேரில், அவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

# உணவகங்களில் சேவை கட்டணம் தடுக்க ரெடியாகிறது சட்டம்

**புதுடில்லி, ஜூன் 4–**

உணவகங்கள் தங்களுடைய 'பில்' லில், சேவை கட்டணத்தை சேர்க்க கூடாது என, உணவு மற்றும் நுகர்வோர் விவகாரத் துறை அமைச்சர் பியுஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

உணவகங்களில், வலுக்கட்டாயமாக சேவை கட்டணத்தை சேர்த்து பில் போடுவதாக, பலதரப்புகளிலிருந்தும் புகார்கள் வருகின்றன.

இதையடுத்து, அமைச்சகம், உணவக பிரதிநிதிகளுடன் கடந்த வியாழன் அன்று பேச்சு நடத்தியது. இதன் தொடர்ச்சியாக, அமைச்சர் பியுஷ் கோயலிடம் கேள்வி எழுப்பப்பட்டபோது, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் கூறியதாவது: உணவக உரிமையாளர்கள், ஊழியர்களுக்கு ஊதியத்தை அதிகரிக்க விரும்புகின்றனர் எனில், உணவு விலையை ஏற்றிக் கொள்ளட்டும். அதற்கு எந்த தடையும் இல்லை. உணவுக்கான விலையை அவர்களே நிர்ணயித்துக் கொள்ளலாம். இதற்கு நாட்டில் எந்த கட்டுப்பாடும் கிடையாது.

ஆனால், அதற்கு பதிலாக, சேவை கட்டணம் எனும் பெயரில், அதை நுகர்வோரிடம் திணிப்பது சரியாகாது. உரிமையாளர்கள், ஊழியர்களுக்கான ஊதியத்தை உயர்த்திக் கொள்ளவோ, அல்லது உணவுக்கான விலையை அதிகரித்துக் கொள்ளவோ தடை எதுவும் இல்லை.

ஆனால், மறைமுக விலை இருந்தால், உண்மையான விலையை எப்படி அறிய முடியும்? சேவையில் திருப்தி ஏற்பட்டால், நுகர்வோர் 'டிப்ஸ்' தருகின்றனர். அதை தொடர்வதில் ஒன்றும் இல்லை. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

இதற்கிடையே, அமைச்சகம் தரப்பில், நியாயமற்ற இந்த கட்டணவசூலிப்பைதடுக்க, உரிய சட்டம் வெளியாகும் எனக் கூறப்பட்டு உள்ளது.



## இணைப்பு 1 - தேர்தல் விதிமுறைகள்
## (விதி 21 ஐப் பார்க்கவும்)

1) தலைப்பு - இவ்விதிமுறைகள் சங்கத்தின் பொறுப்பாளர்களைத்தேர்ந்தெடுக்கும் தேர்தல் விதிமுறைகள் என அழைக்கப்படும்.

2) வேட்பாளருக்கான தகுதி: தேர்தலில் போட்டியிட விரும்பும் வேட்பாளர், வேட்புமனுகோரி தேர்தல் அறிவிக்கை வெளியிடப்படும் நாளன்று உறுப்பினராக, நடப்பாண்டின் சந்தாவை செலுத்தியவராக, இருக்கவேண்டும்.

3) வேட்புமனு தாக்கல் : i) வேட்பு மனுக்களை குறிப்பிட்ட படிவத்தில் குறிப்பிட்ட நாள், நேரத்துக்குள் தாக்கல் செய்ய வேண்டும்.

ii) வேட்புமனு தேர்தல் விதிமுறைகள், சங்கத் துணைவிதிகள் இவற்றை மீறும் வகையில் இருப்பின் நிராகரிக்கப்படும்.

iii) வேட்பாளர் ஒரு உறுப்பினரால் முன்மொழியப்பட்டு, மற்றொரு உறுப்பினரால் வழிமொழியப்பட வேண்டும்.

iv) கீழே தரப்பட்டுள்ள படிவத்தில் வேட்பு மனு தாக்கல் செய்யப்பட வேண்டும்.

4) வாக்களிரின் தகுதிகள் :

அ) வாக்காளர் சங்கத்தில் நடப்பு உறுப்பினராக இருக்க வேண்டும்.

ஆ) தேர்தல் நடைபெறவுள்ள ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் வாக்காளர் பதிவு செய்ய வேண்டும்.

இ) பதிலி மூலம் வாக்களிக்க இயலாது.

ஈ) தேர்தல் அறிவிக்கை நாளுக்குப்பின்னர் உறுப்பினராவோர் வாக்களிக்கத் தகுதியற்றவர்.

5) தேர்தல் திட்டம் : தேர்தல் அறிவிக்கை சங்கத்தின் பத்திரிகையில் வெளியிடப்பட வேண்டும். வேட்புமனு தாக்கல் செய்ய அறிவிக்கை தினத்திலிருந்து 20 நாட்கள் தரப்படவேண்டும். வேட்பு மனு கடைசி நாளிலிருந்து 5 நாட்களுக்குள் தகுதி வேட்பாளர்களின் பட்டியல் சங்க அலுவலகத்தில் வெளியிடப்படவேண்டும். தகுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்ட 5 நாட்களுக்குள் வேட்பு மனுவைத் திரும்பப் பெறலாம். வேட்புமனு திரும்பப்பெறும் கடைசி நாளுக்கு மறுநாள் இறுதி வேட்பாளர் பட்டியல் அலுவலகத்தில் வெளியிடப்படும்.

6) <u>தேர்தல் முறை:</u> தேர்தல் அறிவிப்பு நாளுக்கு முன்னதாக செயற்குழு தேர்தல் குழுவை அமைக்க வேண்டும். தேர்தல் குழுவில் ஒரு தலைவர் மற்றும் 3 உறுப்பினர் அடங்குவர். தேர்தல் குழு உறுப்பினர்கள் சங்க உறுப்பினர்களிலிருந்தே தேர்வு செய்யப்படவேண்டும். தேர்தல் அறிவிப்பை உரிய விதிமுறைகளுடன் தேர்தல் குழு வெளியிட வேண்டும். பெறப்பட்ட வேட்பு மனுக்கள் தேர்தல் குழுவால் மட்டுமே சரிபார்க்கப்பட வேண்டும். இந்த ஆவணங்களை தேர்தல்குழு ரகசியமாக பாதுகாக்கும். வேட்பு மனு ஏற்பு (அ) மறுப்பு குறித்த தேர்தல் குழுவின் முடிவு இறுதியானது. தேர்தல் குழு, தேர்தல் அறிவிப்புக்குப்பின் 7 நாட்களுக்குள் வாக்காளர் பட்டியலை அலுவலகத்தில் வெளியிட வேண்டும்.

தேர்தல் குழுவின் உறுப்பினர் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட முடியாது. இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்ட பின்னர் பொதுச்செயலாளர், மற்றும் இதர பொறுப்பாளர்கள் தேர்தல் ஏற்பாடுகளைச் செய்ய தேர்வுக்குழுவுக்கு உதவி செய்ய வேண்டும்.

7) <u>வாக்குப்பதிவு:</u> ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் கூட்டத் தலைவரின் முடிவுப்படி குறிப்பிட்ட நேரத்தில் ரகசிய வாக்குப்பதிவு மூலம் தேர்தல் நடைபெறும்.

அ) பொதுக்கூட்டத்தில் கூட்ட அறிவிப்பில் குறிப்பிட்ட நேரத்துக்குள் பதிவு செய்பவர்க்கு மட்டுமே வாக்களிக்க அனுமதி உண்டு.

ஆ) வேட்பாளர் பிரதிநிதியை நியமனம் செய்யலாம். தேர்தல் நடைபெறும் போது வேட்பாளரே பிரதிநிதியாகச் செயல்படக்கூடாது. தலைவரின் அனுமதியோடு பார்வையிடலாம்.

இ) வாக்காளர் வாக்குச்சீட்டில் தமது விருப்ப வேட்பாளர் பெயருக்கு நேராக **X** குறியீடு இட்டு வாக்களிக்க வேண்டும். தலைவர் அனுமதிக்கும் வேறு எந்த குறியும் பயன்படுத்தப்படலாம். ஆனால் குறியீடுகள் வேறுபாடின்றி ஒரே மாதிரியாக இருத்தல் வேண்டும்.

8) <u>வாக்குகள் தகுதியிழத்தல் :</u>

அ) வாக்குக் குறியீடு ஒரு பதிவிப்பட்டியலில் தேவையான எண்ணிக்கைக்கு மேல் அதிகமான பெயர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தால் அப்பதவிக்கான வாக்கு தகுதியிழந்ததாகும். அதே வாக்குச் சீட்டில் சரியானபடி குறியீடு இடப்பட்ட பதவிகளுக்கு வாக்குகள் தகுதி உள்ளவையாகும்.

ஆ) ஒரே பெயருக்கு நேராக ஒன்றுக்கு மேற்பட்ட குறியிடுதலும், தேவையான எண்ணிக்கைக்குக் குறைவான பெயர்களுக்கு குறியிடுதலும், சில பதவிகளுக்கு குறியீடு இடாமல் காலியாக விடுதலும் வாக்கை தகுதியற்றதாக்கமாட்டா.

9) <u>வாக்குச் சீட்டு எண்ணுதல் :</u>

i) தேர்தல் நாள் அன்றே வாக்குப் பதிவு முடிந்தவுடனேயே இடைவெளி ஏதுமின்றி வாக்குகளை எண்ணி தேர்தல் குழுவினரின் கையொப்பத்துடன் ஒட்டுப்பதிவி விவரப்பட்டியல் தயாரிக்கப்படவேண்டும்.

ii) வேட்பாளர் விரும்பிக்கேட்டால் ஒரு பிரதிநிதி அனுமதிக்கப்பயிவார். தேர்தல் குழுத்தலைவர், உறுப்பினர்கள் முன்னிலையில் வாக்குச் சீட்டுகள் எண்ணப்படும். பொதுக்கூட்ட உறுப்பினரிலிருந்து தேவையானவர்களை வாக்குப்பதிவு, வாக்குச் சீட்டு எண்ணிக்கை போன்ற பணிகளுக்கு உதவி செய்ய நியமித்துக் கொள்ளலாம்.

iii) வாக்கு எண்ணிக்கை முடிந்தவுடனேயே தேர்தல் குழுத்தலைவர் முடிவுகளை அறிவிப்பார். மேற்கொண்டு விவாதத்துக்கு இடமின்றி இந்த அறிவிப்பு முடிவானதாகும்.

iv) தேர்தல்குழு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு வேட்பாளருக்கும் உரிய தேர்வுச் சான்று வழங்கும்.

v) தேர்தலுக்கான ஏற்பாடுகளையும் / செலவினங்களையும் தேர்தல் குழுவின் விருப்பப்படி பொதுச்செயலாளர் / நிதிச் செயலாளர் செய்து கொடுக்க வேண்டும்.

10) <u>பலவகை விதிகள்:</u>

i) ஒரு வேட்பாளர், தாம் தேர்ந்தெடுக்கப்பட்டால் கடைபிடிக்க விரும்பும் கொள்கைகள், திட்டங்கள் பற்றிய விவரங்களை வாக்காளர்களுக்கு தெரிவித்து ஆதரவு கோரலாம்.

ii) இந்த விதிமுறைகளில் வெளிப்படையாகக் கூறப்படாத ஏதேனும் பொருள் இருப்பின் தேவைப்பட்டால் தேர்தல்குழு சேர்த்துக் கொள்ளலாம். இவைகள் கட்டாயம் பின்பற்றப்படவேண்டும்.

iii) ஒரு வேட்பாளர் / வேட்பாளர்கள் கோரும் பட்சத்தில் 3 உறுப்பினர்களின் ஆலோசனை பெற்று தேர்தல் குழுத் தலைவர் மறுவாக்கு எண்ணிக்கைக்கு உத்திரவிடலாம். இத்தகைய கோரிக்கை தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் முன்னர் வைக்கப்படவேண்டும்.

iv) எந்த உறுப்பினரும் / உறுப்பினர் குழுவும் தேர்தல் சம்பந்தமான தமது உரிமைகள் பற்றி வழக்கு மன்றங்கள் அனுகக்கூடாது.

v) தேர்தல், விதிமுறைகளின்படி நடைபெறவில்லை என்று யாராவது உறுப்பினர் / உறுப்பினர் குழு கருதினால் அவர்கள் மொத்த உறுப்பினர்களின் 25% பேர் பேர் கையெழுத்து பெற்று மறுதேர்தல் பற்றி முடிவு செய்ய சிறப்புப் பொதுக் கூட்டத்தைக் கூட்டக் கோரலாம்.

<u>ஊழல் எதிர்ப்பு இயக்கம், சென்னை</u>

............... ஆண்டுக்கான பொறுப்பாளர் தேர்தல்
நியமனப் படிவம்

1) போட்டியிடும் பதவி

2) வேட்பாளரின் பெயர், உறுப்பினர் எண், முகவரி

3) i) முன் மொழியும் உறுப்பினர் பெயர், உ. எண், முகவரி
ii) முன்மொழிபவரின் கையொப்பம்.

4) i) வழி மொழியும் உறுப்பினர் பெயர், உ.எண், முகவரி.
ii) வழி மொழிபவரின் கையொப்பம்.

<u>வேட்பாளரின் ஒப்புதல்:</u>

மேற்கண்ட பதவிக்குப் போட்டியிட ஒப்புகிறேன். தேர்தல் விதிமுறைகளைத் தவறாமல் கடைபிடிப்பேன்.

வேட்பாளர் ஒப்பம்

இடம் :
தேதி :

**அலுவலக உபயோகத்துக்கு**

5) சரிபார்போரின் குறிப்புகள்: வேட்புமனு பெறப்பட்ட நாள்......... நேரம்.....
வேட்புமனு செல்லத்தக்கது
வேட்புமனு திரும்பப் பெறப்பட்டது
வேட்புமனு செல்லத்தக்கதல்ல. காரணம்.

சரிபார்ப்போர் ஒப்பம் 1)

2)

3)

தேர்தல் குழுத் தலைவரின் கையொப்பம்

இலஞ்சம் தவிர்! Date of Publication: 5th of Every Month நெஞ்சம் நிமிர்!!


**நேர்மை நெறி- ஜூன் 2022**

Registered with the Registrar of News Papers for India,New Delhi, Regn.No.TNBIL/2003/10419

SSB/Chennai City North Divn Regn.No.TN/CCn/671/2018-20

PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)WPP533/2018-20

### சொன்னது பெரியாரல்ல



நான் தீமிதி, பால் காவடி, அப்படீன்னு போனதில்ல. மனிதனைச் சிந்திக்க வைக்காத எந்த விஷயமும் சமுதாயத்துக்குத் தேவையில்லை. பெத்த தாய்க்குச் சோறு போடாதவன் மதுரை மீனாட்சிக்குத் தங்கத்தாலி வச்சிப் படைக்கலாமா? ஏழை வீட்டுப் பெண்ணுக்கு ஒரு தோடு, மூக்குத்திக்குக்கூட வழியில்ல. இவன் லட்சக்கணக்கான ரூபாயில வைர ஒட்டியாணம் செஞ்சி காளியாத்தா இடுப்புக்குக் கட்டி விட றான். கறுப்புப் பணம் வச்சிருக்கிறவன் திருப்பதி உண்டியல்ல கொண்டு போய்க் கொட்றான். அந்தக் காசில ரோடு போட்டுக் கொடுக்கலாம். ரெண்டு பள்ளிக்கூடம் கட்டிக் கொடுக்கலாமில் லையா? அதையெல்லாம் செய்யமாட் டான். சாமிக்குத்தம் வந்திடும்னு பயந்துகிட்டு செய்வான். மதம் மனிதனை பயமுறுத்தி வைக்குதே தவிர, தன்னம் பிக்கையை வளர்த்திருக்கா? படிச்சவனே அப்படித்தான் இருக்கான்னேன். கடவுள் இருக்கு, இல்லைங்கிறதைப் பத்தி எனக்கு எந்தக் கவலையும் கிடையாதுன்னேன். நாம செய்யறது நல்ல காரியமாக இருந்தா போதும். பக்தனா இருக்கிறதை விட யோக்யனா இருக்கணும். அயோக்கியத்தனம் ஆயிரம் பண்ணிகிட்டு கோயிலுக்குக் கும்பாபிஷேகம் பண்ணிட்டா சரியாப் போச்சா?"

**சொன்னவர் மரியாதைக்குரிய**
**பெருந்தலைவர் காமராஜர் அவர்கள்**

**வரலாற்று நாயகன் காமராஜர் ..**

# நேர்மை நெறி

ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் **திங்களிதழ்**

**ஆசிரியர் : வே. கார்த்திகை ராஜன்**

**வெளியீட்டுச்செயலாளர் : ஜி கோவிந்தசாமி:**

Permitted to Posting 7th to 13th
Posted at Patrika Channel
(Egmore RMS/1) on 13 June 2022
published online)

**ஞாங்கர் மாய்ந்தனள் மடந்தை**
**இன்னும் வாழ்வல் என் இதன் பண்பே !**

*பெறுநர்*

IF UNDELIVERED, PLEASE RETURN TO

**ACM, 155, KONNUR HIGH ROAD,**

AYANAVARAM, CHENNAI-23

Owned by Anti Corruption Movement, Chennai and published through online on its behalf of Govindasamy (9841026766) from No.155, "Nambakam" Konnur High Road, Ayanavaram, and Chennai-600 023 and printed by Thiru G Parthasarathy at VPS PRINTERS, No 292, TH Road, Chennai-600005 Editor: V.Karthikai Rajan

இலஞ்சம் கொடுக்காதீர்! இலஞ்சம் கொடுக்க விடாதீர்!!